சிவமயம்

1956

குமரகுருபரன்



த-3116

[மலர் 25] 1974-ஆம் மாசி மீ 1-ம் (13-2-74) [

தனிப்பிரதி 40 பைசா வருடச் சந்தா ரூ

ஆசிரியர் குழு.

1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,
சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி.

2 திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M. A., B.O.L.
ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸிபால், திருப்பனந்தாள்.

3. திரு. பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.
ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4. திரு. டி. எச் விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]
B. A., L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர். சென்னை-86

5. திரு. Dr. T B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.
அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை-2

K. சுப்பிரமணிய பிள்ளை
கௌரவ நிர்வாக ஆசிரியர்.

உள்ளுறை

பக்கம்

1. திருவுந்தியார்-உரை விளக்கம் ... 97
2. குமரகுருபரரின் கவிதைவளம் ... 100
3. குறையில் வழங்கும் குருநாதா! ... 107
4. குமரனின் குறும்பு 108
5. இன்பம் வேண்டுமா? ... 112
6. அறு தெய்வ வழிபாடு 119
7. ஆண்டவன் இருக்கின்றான் 124
8. அருள்மொழி அமுது ... 125
9. வாழ்க்கைத் துணை ... 132
10. இந்து சிந்தனையாளர் கவனத்துக்கு ... 136
11. The 73rd Feeding Charity at Varanasi Rs I4,500/- — 137
12. மூன்றாம் திருமுறையின் முதற்பாடல்கள்-உரை 41 to 42

T-UN-440

PRESS & REGISTRATION OF BOOKS ACT.

Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV (SEE RULE 8)

R: No. 1485/57.

Statement about ownership & other particulars about "KUMARAGURUPARAN" - (Monthly)

1. Place of Publication ... Srivaikuntam

2. Periodicity of its publication ... Monthly

3. Printer's Name ... Kumaraguruparan Achagam
   Nationality ...
   Address ... Sakattukara Street, Srivaikuntam.

4. Publisher's Name ... K. Subramania Pillai
   Nationality ... Indian
   Address ... Permanent President, 'Srivaikuntam Sri Kumaraguruparan Sangam'

5. Editor's Name ... K. Subramania Pillai
   ... Indian
   ... Managing Editor
   ... Srivaikuntam

6. Names and addresses of individuals who own the newspapers and partners or shareholders holding more than one percent of the total capital. ... Srivaikuntam
   ... Sri Kumaraguruparan Sangam
   (Registered under Act XXI of 1860)

I. K. Subramania Pillai, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

K. Subramania Pillai
Signature of Publisher.

12—3—74.

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை

மலர் 25 | பிரமாதீச ஹூ மாசி மீ 1வ [13-2-74] | இதழ் 2

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே
திருச்சிற்றம்பலம்

திருவியலூர் உய்ய வந்த தேவ நாயனார்

அருளிய

திருவுந்தியார் — உரைவிளக்கம்

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்
பாலகவி
திரு, வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை

தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரன்
நோக்கிற் குழையுமென் றுந்தீபற
நோக்காமல் நோக்கவென் றுந்தீபற. 11

உலகுயிர்களுடன் கூடி அவ்வுலகுயிர்களாகவும் அவற்றிற்கு அப்பாற்பட்டு அவற்றின் வேருகவும், ஆதார யோகத்தில் ஆதார மூர்த்திகளாகவும் நிராதாரயோகத்தில் அம்மூர்த்திகளுக்கு அப்பாற்பட்ட சிவமாகவும் விளங்குகின்ற ஒப்பற்ற ஆன்மநாயகனைத் தற்போதம் கொண்டு அறிகின்ற சுட்டறிவினுலே அறிய முற்பட்டால் அறிய முடியாது தத்பதப் பொருளாகிய சிவத்தைத் தற்போதத்தால் நோக்காமல் சிவ போதத்தால் நோக்கி அறிய வேண்டும்.

சொரூப நிலையில் உலகுயிர்களைக் கடந்து விளங்குகின்ற சிவம், ஆன்மாநுக்கிரகத்தின் பொருட்டாகத் தடத்த நிலையில் அருவும், அருவுருவம், உருவம் ஆகிய திருமேனிகளைக் கொண்டு எழுந்தருளுவார். திருவருட் பேற்றைப் பெற விரும்புபவர்கள், மனத்தாற் செய்யும் அக வழிபாடும் காயத்தாற் செய்யும் புற வழிபாடுமாகிய இருவகை வழிபாடுகளையும் செய்வார்கள். யோகநெறி என்று சொல்லப்பெறும் அக வழிபாடு, பக்குவர்களுக்கு மட்டும் கை கூடுவது. அபக்குவர்களாகிய ஏனையோர் புறவழிபாட்டில் உரிமையுடையவராவர். பெரும்பாலராயிருக்கும் அபக்குவர்களின் பொருட்டாகவே சிவபெருமான், உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளுகின்ருர் உலகுயிர்களின் உய்தியைத் திருவுள்ளத்திற் கொண்டு சிவபெருமான் கொள்ளுகின்ற எல்லாத் திருவுருவங்களும் அவரது அருளுருவங்களேயாதலின், அவற்றில் சொரூப சிவத்தின் உண்மை இலக்கணங்கள் ஒரு சிறிதும் குறையுமாறில்லை. எல்லாப் பொருள்களிலும் கலந்து ஒன்ருயிருப்பவரும் அவற்றிற்கு அப்பாற்பட்டு வேருயிருப்பவரும், "ஒருவர்" என்றும் "தத்" என்றும் வேதோபநிடதங்களில் துதிக்கப்பெறுகின்றவரும் மேலானவராகிய சிவபெருமானேயாவர். அறியப்படும் பொருளாகிய அவரை அறியும் பொருளாகிய தன்னிலிருந்து வேறுபடுத்திக் காணமுற்பட்டால் ஒருபோதும் காண முடியாது. அநாதியே ஆன்மாவுடன் ஒன்றுபட்டு உடனுகித் தன்னைத் தோற்ருமல் சிவம் நிற்கும் முறைமையை உணர்ந்து ஆன்மாவும் தன்னை தோற்ருமல் சிவமாக நின்று சிவத்தை அறிதல் வேண்டும்.

மூலை யிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியரென் றுந்தீபற
தவத்தில் தலைவரென் றுந்தீபற. 12

நிலவுலகத்திற்கு வந்து பிறந்து முன்னைப் பிறப்புக்களிற் செய்த நல்வினை தீவினைகளுக்கேற்ப இன்ப துன்பங்களை அநுபவித்து, மேலும் வினைகளை ஈட்டி இருளிற் கிடந்தவர்களை உண்மை உணர்த்திப் பரபோகத்தில் அழுந்தும்படி கூட்டுவித்த ஞானாசாரியர், அளவிடப் படாத பெருமையுடையவராவர். அகக்கரணம், புறக்கரணங்களை உலக விடயங்களிற் செல்லவிடாது தடுத்துச் சிவத்தையே நிராக்கும் அருள்வழியிலொழுகி அரிய தவமாகிய சிவஞான நிட்டை கூடிய தலைவருமாவர்.

தாயின் சுரோணிதத்தில் தந்தையின் சுக்கிலம் சென்று சேருகிற வேளையில் சீவன் சிவபெருமானுடைய ஆணையினால் சென்று அச்சுக்கில சுரோணிதத்திற் பதிந்து கன்மத்துக் கீடாக மூன்றரைக்கோடி மயிர்க்கால்கள், எழுபத்திராயிரம் நாடி, பத்துவாயு, ஒன்பது துவாரம், எண்சாணுடம்பு, ஏழுதாது, ஆறு ஆதாரம், ஐந்து இந்திரியம் நான்கு கரணம், மூன்று மண்டலம், இரண்டு வினை ஆகியவற்றை ஒன்றாகக் கொண்டு போர்த்தப்பெற்ற தோலுடன் உருக் கொண்டும், தாயின் கருப்பையில் இருக்கும் போது ஆறும் மாதம் உந்தி நானத்தினால் அன்னரசத்தைப் பருகும். அதனால் சுழுமுனைநாடி அடைபட்டு, இடைநாடியும் பிங்கலை நாடியும் திறந்து பிராணவாயு புகுந்து நாளொன்றுக்கு இருபத்தோராயிரத்தறுநூறு மூச்சோட்டம் உண்டாகும். இதின்படி முப்பத்திரண்டு நூறாயிரத்து நாற்பதினாயிரம் மூச்சோட்டம் தாயின் கர்ப்பத்திற்சென்றவுடன் உதர கன்மந்தொலைந்து சிவ சத்தி பலத்தால் தாயின் உதரத்திலிருந்து தலைகீழாகப் பூமியில் பிறப்பான். பிறந்தபின்பு கன்மங்களுக் கீடான புசிப்புக்களைக் கருதிச் சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமாகிய அவற்றைத் தானங்களை அடைந்து இருளில் மறைந்து மயங்கி நிற்பான். இங்ஙனம் பொய்யாகிய சுக துக்கங்களில் அழுந்தித் துன்புறும் உயிர்களைக் கீழ்நோக்கும் போதம் ஒழித்து உண்மையுணர்த்திப் பரமாகாசப் பேரொளியில் விடுவதற்குப் பரம்பொருளாகிய சிவபெருமானொருவரே வல்லவர் அவரால் அதிட்டிக்கப்பெற்றுஅவராகவே எழுந்தருளியிருந்து அந்தப் பரமோபகாரத்தை ஆன்மாக்களுக்குச் செய்கின்ற ஞானாசிரியர், சாலப் பெரியவரும் தவத்தில் தலைவருமாவார்.

(தொடரும்)

குமரகுருபரரின் கவிதை வளம்

திரு: த. பி. ஆறுமுகம் எம். ஏ. அவர்கள்;
[ம. தி. தா. இந்துக் கலாசாலை, திருநெல்வேலி-1]

முன்னுரை:-

> "ஆர்த்த சபை நூற்ருெருவர் ஆயிரத்தொன்ரும் புலவர்
> வார்த்தை பதிளுயிரத் தொருவர்"

என்பது அவ்வைத் தமிழ், 'ஓங்கலிடை வந்துயர்ந்தோர் தொழ விளங்கி ஏங்கொலி நீர் ஞாலத்திருளகற்றும்" தன்மைத்தானது நம் செந்தமிழ் மொழி. தித்திக்கும் தமிழில், வளம் பொருந்திய கவிதையினைப் படைப்பது எளிய செயலன்று கவிதை இலக்கணமான "காரிகை" கற்றுக் கவிபாடுவது மிகவும் அரிது. இதனைக் கருதியே "காரிகை கற்றுக் கவி பாடுவதினும் பேரிகை கொட்டிப் பிழைப்பது மேல்" என்று நம் முன்னேர்கள் கூறியுள்ளனர். மேலும் "காரிகை கற்ற அளவில் வருவதன்று கவிதைக் கலை" என்பதற்குச் சான்ருக சில தமிழ்ப்பாடல்களே இலங்குகின்றன. "கருவிலே திருவுடையவர்கள் கவிகள்" என்பர் ஆன்ருேர். இத்தகைய திருவினைக் கருவிலே பெற்ற உத்தமக் கவிஞருள் ஒருவரே, குன்றுதோறும் நின்ருடும் குமரனின் இன்னருள் பெற்ற குமரகுருபரர் ஆவார். அவர்தம் கவிதை வளத்தினை சிறிதுகாண்போம்.

பதினேழாம் நூற்ருண்டில் வாழ்ந்த இத்தெய்வக்கவிஞர் சைவத்தையும்-தமிழையும் தம்இரு கண்களாகக் கொண்டு, சைவ-தமிழ் இலக்கண, இலக்கியங்களை யெல்லாம் ஐயந்திரிபறக் கற்று, நுண்மாண் நுழை புலம் மிக்கவராய்த் திகழ்ந்தார். இவரது பாடல்களில் தென் பொதிகைத் தென்றலின் மென்மையினையும் தீந்தேனின் இனிமையினையும், தண்பொருநை நதியின் வளத்தினையும் ஒருங்கே காணலாம். "நாடும் பொருட்சுவை, சொற்சுவை தோய்தர நாற்கவியும் பாடும்"

வல்லமை பெற்றவர் இவர். "பாட்டும், பொருளும், பொருளாற் பொருந்தும் பயனும்" ஒருங்கே கூட்டும் படியாக பல கவிதைகளைப் படைத்துள்ளார்.

யாப்பு:- தமிழிலுள்ள நால்வகைப் பாக்களிலும், பல்வேறு பாவினங்களிலும் பொருட் சிறப்பமையப் பாடுவதில் வல்லவர் என்பதனை இவர் தம் கவிதைகள் பறை சாற்றுகின்றன. பாக்கள், பாவினங்கள் ஆகியவற்றின் இலக்கணத்திற்கு இலக்கியமாகவே இவர் இயற்றிய "சிதம்பர செய்யுட் கோவை" விளங்குகின்றது. "இழுமென் ஒலியால் விழுமியது நுவலல்" என்பது தொல்காப்பியம். குருபரரின் பாடல்கள் "இழும்" என்னும் ஒலியால்நிறைந்து விழுமியது பயத்தலைக் காணலாம் எடுத்துக் காட்டாக ஒரு பாடலைக் காண்போம்.

"தொடுக்கும் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறை பழுத்த
துறைத் தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கை யகழ்ந்
தெடுக்குந் தொழும்பருளக் கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே யெறி தரங்கம்
உடுக்கும் புவனங் கடந்து நின்ற
ஒருவன் றிருவுள்ளத் திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயி ரோவியமே மதுகரம் வாய்
மடுக்குங் குழற் காடேந்து மிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத்து வசன் பெற்ற பெரு
வாழ்வே வருக வருகவே!

(மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-வருகைப் பருவம்)

இப்பாடலின் ஓசை நயத்தையும், ஆற்றொழுக்குப் போன்ற நடையையும், பொருட் சிறப்பையும் அறிந்தே அம்மை மீனாட்சி குழந்தையுருவில் வந்து, அடிகளுக்குப் பரிசளித்துச் சென்றனள் போலும். "ஓசை தரும் இன்பம் உவமையிலா இன்பமன்றோ!"

பொருளமைதி:- "பண் இன்றி பாடல் சிறப்பதில்லை; பக்தி இன்றி வாழ்வும் சிறப்பதில்லை" என்பது தெளிவு. சுவாமி

களின் பாடல்கள் அனைத்தும் இறையுணர்வை வளர்ப்பன வாகவும், இறைவனின் தண்ணளியினை விளக்கிக் காட்டுவன வாகவும் அமைந்துள்ளன. பக்திச்சுவை மிகுந்த இவர் தம் பாடல்கள் ஆன்மீகவளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. "உயர்ந்த இலக்கியத்தின் குறிக்கோள் ஆன்மீக ஆற்றலைத் தூண்டுவதாய் அமைதல் வேண்டும்" என்பர் டாக்டர். இராதகிருஷ்ணன், (The aim of great literature is to kindle the spirit) இந்நோக்கி லேயே அடிகள் பலநூறு பாடல்கள் பாடி, ஞால மக்களின் அஞ்ஞான இருளகல, மெய்ஞ்ஞான ஒளிவீச, ஆன்மீகத்துறை யில் செயற்கரிய தொண்டாற்றியுள்ளார். "பண்பாடு, சமயம் உயர்ந்த கருத்துகளைத் தருதல், உள்ளக் கிளர்ச்சிகளையும், புலன்களையும் அடங்கச் செய்தல், வாழ்வில் நன்மைகளை மிகுதிப்படுத்துதல் முதலியன கவிதையினால் உண்டாகும் பயன்களாம். இத்தனையுமற்ற கவிதை பயனற்ற ஒலிக் கூட்டமே" என்று ரிச்சர்ட்ஸ் என்ற திறனாய் வாளர் கூறுகிறார். ("Culture, Religion Instruction in some special senses, softening of the passions and the furtherence of good causes may be directly concerned in our judgements of the poetic values of experiences Otherwise, as we shall see, the word 'Poetic' becomes a useless sound" –I. A. Richards) இத்திறனாய்வாளர் கவிதைப் பயன்களாக கூறுவன யாவும் குமரகுருபரர் இயற்றிய நூல்களில் பாங்குற அமைந்திருத்தலைக் காணலாம். அவர் தம் கருத்துக்களில் ஒரு சிலவற்றைக் காண்போம்.

இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது; நிலையற்ற இவ்வாழ் வில் நாட்டம் செலுத்துவதைவிட நிலைத்த பேரின்ப வாழ்வே சிறந்ததெனக் கவிஞர் கூறுகின்றார். மனிதராய்ப் பிறந்த யாவரும் ஒருநாள் இறத்தல் உறுதி. இளமையும் நிலையா னதன்று, யாக்கையும் நிலையானதன்று; மலைபோன்ற செல்வ மும் நிலையானதன்று. இந்நிலையற்ற வாழ்க்கையைப் பற்றிக் குமரகுருபரர் கூறுவதாவது,

"நீரிற் குமிழியிளமை நிறை செல்வம்
நீரிற் சுருட்டு நெடுந் திரைகள்–நீரில்

எழுத்தாகும் யாக்கை நமரங்கா ளென்னே
வழுத்தாத தெம்பிரான் மன்று''

(*சிதம்பர செய்யுட் கோவை–489*)

நிலையாமைத் தத்துவத்தை உவமை வாயிலாக மிக அழகாக எடுத்தியம்பியுள்ளார். இளமை, நீரில் தோன்றும் குமிழி போன்றது; சிறிது நாளில் மறைந்து விடுவது, செல்வம், நீரில் எழும் அலைகள் போன்றது; அலையானது நிலைத்து நில்லாமல் சென்றுகொண்டே இருப்பதைப் போன்றது செல்வம். யாக்கை, நீரில் எழுதப்படும் எழுத்துப் போன்றது; நீரில் எழுதப்படும் எழுத்தானது பிறரால் அறிந்து கொள்ள முடியாதது; மறையக்கூடியது. தொல்காப்பியம் கூறும் ''காஞ்சித் திணை''யின் விளக்கமாக இப்பாடல் சுவைபட அமைந்துள்ளது.

குமரகுருபரர், கவிதைத் தன்மையும், சுவையும் குறையாமல் ''நீதிநெறி விளக்கம்'' செய்துள்ளார்கள். ''சிற்றுயிர்க் குற்றதுணை''யாக 'கேடில் விழுச்செல்வ'மான கல்வி விளங்குவதை பல பாடல்களில் எடுத்தியம்புகிறார். ''ஈதல் இசைபட வாழ்தல்'' என்னும் உயரிய தத்துவத்தை விளக்கும் திறம் மிகவும் நன்று. ஈத்துவக்கும் வள்ளற்பெரு மக்களை தலை, இடை, கடை என முத்திறத்தாராக வகுத்து, பொது மகள் எழில் நலம் பலர்க்கும் பயன்படுதல் போல தலையாயர் செல்வம் ''பயன் மரம் உள்ளூர்ப் பழுத்தற்றாற் போல'' யாவர்க்கும் பயன்படும் என்றும்; குலமகள் எழில்நலம் கொண்ட கணவனுக்கு மட்டும் பயன்படுதல் போல, இடையாயர் செல்வம், உடையவர்க்கு மட்டும் பயன்படும் என்றும்; கைம்பெண்டிர் எழில் நலம் யார்க்கும் பயன் தராததைப் போன்று, கடையாயர் செல்வம் ஈதலும், துய்த்தலுமின்றி ''நாய் பெற்ற தெங்கம் பழம்'' போன்றதாம். அவரது பாடலைக்காண்போம்.

''பொதுமகளே போல்வ தலையாயார் செல்வம்
குலமகளே யேனையோர் செல்வம் – கலனழிந்த
கைம்மையார் பெண்மை நலம்போற் கடையாயார்
செல்வம் பயன் படுவதில்''.

(*நீதிநெறிவிளக்கம்: 65*)

உவமை என்பது "உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை" என்பது தொல்காப்பியம். ஆனால் சுவாமிகள் இங்கு ஒரு இழிந்த உவமையை எடுத்துக்கூறி, சிறப்பான கருத்தைக் கூறும் திறம் சிந்தனைக்கு நல் விருந்தாயமைகின்றது.

ஐந்தறிவு உயிர்களின் செயலைக்கொண்டு, ஆறறிவு படைத்த மாந்தர்க்கு அறம் உரைக்கும் திறம் வியத்தற்குரியது. "செல்வத்துப் பயன் ஈதலே" என்ற குறிக்கோளை விளக்கவந்த அடிகள்:

"வாங்குங் கவளத்தொரு சிறிதுவாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறு — ஆங்கதுகொண்
டூறுமெறும்பிங் கொரு கோடி யுய்யுமால்
ஆருங் கிளை யோடயின்று": (நீதிநெறிவிளக்கம்: 37)

தாம் உண்ணக்கூடிய கவளத்துள் சிறிதளவு, வாயினின்று தவறி விழுந்தாலும் யானை கவலை கொள்ளாது. அங்ஙனம் சிதறிய உணவை கோடிக்கணக்கான எறும்புகள் தன் நிறைந்த சுற்றத்தோடு உண்டு மகிழும் என்று கூறுமுகமாக, செல்வர் தன் மலை போன்ற செல்வத்தில் ஒரு சிறு பகுதியை வறியவர்களுக்குக் கொடுத்தாலும் அது நன்மையாய் முடியும் என்ற கருத்தை குறிப்பினால் அணிநயம்படத் தெரிவிக்கின்றார். அணிகள், கவிதை எனும் அழகு மங்கைக்கு, மேலும் அழகிற்கு அழகு செய்வதாம். இவ்வாறு பல அணிநயங்கள் தோன்ற கவிதைகள் பல இயற்றி, மனிதப் பண்பாட்டை வளர்த்தலில் குமரகுருபரரின் கவிதைகள் பெரும் பங்கினை நிறைவு செய்கின்றன.

கற்பனை:- கண்ணிற் கண்ட காட்சிகளைக் கருத்தால் விரிவு படுத்தி, கவியில் அமைக்கும் பண்பு கவிஞரிடத்தே உண்டு. உயர்வு நவிற்சி மிகுந்துள்ள கற்பனைகளைக் கையாண்டுள்ள குமரகுருபரர், இயல்பு நவிற்சியாய் அமைந்துள்ள கற்பனைகளையும் பாங்குடன் கையாண்டுள்ளார்.

குழவிப் பருவத்திலிருக்கும், வேளூர்க்குமரன் சிறுபறையினை முழக்குகின்றான். பறையொலி எங்கும் கேட்கிறது, குமரனின் பறையொலியைக் கேட்ட மயில்கள், அதனை மேக முழக்கமென்று எண்ணி ஆடின; தலைவனின் பிரிவினைத்

தாழாது வருந்தும் தலைவி, அதனைக் கடலொலி என்றெண்ணி காதல் கூர்ந்தனர்; மறையொலி என்று எண்ணி அந்தணர் உள்ளங் களித்தனர்; சிவானுபூதியர் அதனை பரநாதஒலி யென்று எண்ணி நெக்குருகினர்; தேவரும், முனிவரும் அதனை வாணன் குடமுழா வொலியெனவும்; திருமாலின் மத்தளஒலி எனவுங் கருதி, மகிழ்ச்சிப் பெருக்கில் திளைத்த னராம். பாடலைக் காண்போம்:

"மழைமுகில் பிளிறு முழக்கென விரிசிறை
மட மயிலின மகவ
மால் கடலோலிடு மொலி யென விரக
மடந்தையர் மன நெகிழப்
பழமறை யார்ப்பென வாகுதி வேட்டெழு
பண்ணவ ருண் மகிழப்
பரநாதத் தொலி யெனவனு பூதி
பலித்தவர் நெக்குருக
அழலவிர் சோதி யெமைய டைஞ்செய
ஆயிர மங்கை யினோர்
அண்ணறு வைத்திடு குடமுழ வொடு சுடர்
ஆழியவன் கொட்டு
முழவென வமரரு முனிவரு மார்ப்ப"

(முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்-சிறுபறை)

முருகனின் பறையொலி விளைத்த மாற்றங்களை, கற்பனை யுடன் இயற்கை நிகழ்ச்சியோடு ஒப்பிட்டுக் காட்டும் திறம் படித்து மகிழ்தற்குரியது. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில், தாலப்பருவப் பாடலில், உயர்வு நவிற்சிபட கற்பனை அமைத்துப் பாடியுள்ளதைக் காண்போம். சோலையிலுள்ள தென்னை மரங்கள் வளர்ந்தோங்கி, விண்ணவர் கோன் அவை யில் நடனமாடும் மயிலின மாதர்முன், வேனிற் களைப்புத் தீரும்படி இளநீர்க் குலைகளைக் கொடுத்தனவாம். கமுகமரம் நீண்டு வளர்ந்து அம்மெல்லியலார்க்கு கவரி வீசுகின்றதாம். உயர்வு நவிற்சிபட அமைந்துள்ள இக்கற்பனை, மருட்கையை யும், உவகையையும் ஒருங்கே நமக்கு ஊட்டுகின்றன.

முடிவுரை:-

கவிதை இன்புறுத்துவதோடு, அறிவுறுத்துவனவாகவும் அமைந்து, உணர்ச்சி, வடிவம், கற்பனை ஆகிய மூன்றும் ஒன்

ருய்ச் சேர்ந்து உருவெடுத்து, வாழ்க்கைத் தத்துவத்தை செம்மையாக எடுத்துரைத்து, காலத்தை வென்று ஞாலத்திற்கு வழிகாட்டியாய் அமைவதே உத்தமக் கவிதையாம். இத்தகைய கவிதையைப் படைக்கும் கவிஞன் காலதத்துவத்தின் எதிரொளியாய் - காலத் தேவையின் எதிரொலியாய் அமைவான் என்றும் கூறுவர். இவ்வாறு திறனாய்வாளர் கூறும் கவிதை இலக்கணத்திற்கு தக்க எடுத்துக்காட்டாக விளங்குபவை குமரகுருபரரின் கவிதைகளாம்.

இவ்வாறு குமரகுருபரரின் கவிதைகள் பக்தி உணர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு, அவர் காலத்தில் பெருவழக்காய் நின்ற சிற்றிலக்கியங்களின் வகைகளான, பிள்ளைத் தமிழ், கலம்பகம், கோவை போன்ற பல்வேறு வடிவங்களில் கவிதையினை இயற்றி, உயர்வு நவிற்சியுடன் பல்வேறு கற்பனைகளை பாங்குற அமைத்து, வளமிக்க கவிதைகளைப் படைத்து தமிழன்னைக்கு அணி செய்துள்ளார். இவர்தம் கவிதைகள் சைவ சமய உண்மை விளக்கங்களாய், தமிழ் இலக்கியக் கருவூலங்களாய் விளங்குகின்றன. "கல்லார்க்கும், கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பாக" இவர்தம் கவிதைகள் அமைந்துள்ளன என்பது வெள்ளிடைமலை. அவற்றைக் கற்று இன்பமும், பயனும் ஒருங்கே அடைதல் தமிழர் தம் கடனாகும். "திமிரமதகற்றுந் தெய்வக்கவிஞன் குமரகுருபரன்" என்னும் உரை பொய்யுரையுமன்று; புனைந்துரையுமன்று; மெய்யுரையே!

குறையில் வழங்கும் குருநாதா!

திரு: வண்ணை: ஆ. ஜானகிராமன் அவர்கள்,
சென்னை–21

தனன தன தான தான
தனன தன தான தான
தனன தன தான தான –தனதானு

அழக னொடு வேலு மாட
அரவ மொடு தோகை யாட
அணிக்கொ டியின் சேவ லாட –வருவானே!

குழந்தை சிவ பால னுட
குழைந்து சிவ காமி யாட
குலவி சிவ னுரு மாட –மகிழ்வோனே!

தழுவுங் குற மாது மீது
தவித்த மனம் மோக மாகி
தணிகை மலை மீது காதல் –புரிந்தோனே!

அழுத்த மன சூரன் சாய
அமரர் குல வாழ்வு மோங்க
அணிக்க டவுள் யானை நாடி –மணந்தோனே!

அழுக்கு மனம் தூய்மை யாக
அகந்தை சினம் மாய்ந்து போக
அறிவு தெளி வான ஞானம் –அருள்வோனே!

இழுக்கு பழி பாவம் தீர
இடுக்கண் பிணி யாவு மோட
இறைஞ்சு மெனை காக்க வாரும் –குருநாதா!

பழுத்த தமிழ் வேதம் பாட
பணிந்து உனை நானும் பாட
பழம்நீ மலை மீது வாழும் –குமரேசா!

வழங்கு மொளி ஞான மாகி
வணங்கு முக மாறு மோடு
வருக இரு மாது வோடு –பெருமானே!

முற்றும்

குமரனின் குறும்பு

திருமதி ப. உமாதேவி அவர்கள்,
பாரதிதாசன் மகளிர் கல்லூரி புதுவை-1

கடற்கரை மணலில் சிறுமியர் சிற்றில் கட்டி மணற் சோறுக்கி விளையாடுகின்றனர். அவர்கள் விளையாட்டினையும் கள்ளமில்லா மகிழ்ச்சியினையும் கண்ட கடல் தனது அலைகளாகிய கைகளால் முத்துக்களை எங்கும் வாரியிறைத்து விளையாடுகின்றது, மயக்கும் மாலைப்போதில் மகிழ்வுடன் விளையாடும் சிறிய பெண்கள் தங்களை நோக்கிவரும் சிறுவனைப் பார்க்கின்றனர். உடனே அவர்கள் முகம் வாடுகின்றது. ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கின்றனர். பின்னர் தங்களை நோக்கித் தளர்நடையிட்டு வரும் சின்னஞ்சிறிய உருவத்தினை உற்று நோக்குகின்றனர்,

அழகிய, கரிய கொண்டையொன்று உச்சியில் எழிலுடன் கட்டப்பட்டுள்ளது. வனப்புடன் தூக்கிக் கட்டப்பட்டுள்ளக் கொண்டையில் அன்றலர்ந்த, மணம் பரப்பும் தேன் மலர்கள் புதுமையுடன் ஆட்டப்பட்டு இருப்பதோடு பல வகைத் தலையணிகளும் அணிவிக்கப்பட்டுப் பொலிவுடன் விளங்குகின்றது. கொண்டையில் ஊசலாடும் முத்துச் சரங்களும். நெற்றியில் தவழும் வைரச்சுட்டியும், காதுகளில் தொங்கும் குண்டலங்களும் குழந்தையின் பெற்றோர் செல்வர்கள் என்பதைப் பறைசாற்றுகின்றன. பலவித ஆபரணங்களையும், அழகான புதுப்பட்டாடைகளையும் அணிந்து மனதைக் கவருங் கோலமும், மனமோகனப் புன்னகையுமாய் வரும் அந்த உருவத்தைக் கண்டு சிறுமியர் களித்துக் கூத்தாடவில்லை. கலக்கமே கொண்டனர், ஏன் கலக்கம் கொள்ள வேண்டும். பதினேழு திங்களே நிரம்பப் பெற்ற அந்தச் சிறு பாலகன் தங்கள் சிற்றில்களை மிதித்து அழிப்பதற்குத்தான் வருகின்றான் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால் அவர்கள் வருந்துகின்றனர்.

தங்களை நெருங்கி வரும் பாலகனிடமிருந்து தாங்கள் இழைத்தச் சிற்றிலை எவ்வாறு காக்கலாம் என்று சிந்திக்கின்ற

னர், அவனோ பெரிய இடத்துப்பிள்ளை அதுவும் மிக மிகப் பெரிய இடத்தைச் சேர்ந்தவன். அதனால் அடித்துவிட முடியாது. எனவே சாட்சிக்காரன் காலில் விழுவதை விடச் சண்டைக்காரன் காலில் விழுவதே மேல் என்று எண்ணுகின்றனர். அதனால் தங்களை நெருங்கிவிட்ட அந்தப் பாலகனைச் சூழ்ந்து கொண்டு தாங்கள் சிற்றில் இழைத்து விளையாடும் அருமையினைக் கூறுகின்றனர். அதுவும் வெற்று வார்த்தைகளால் அல்ல. அழகிய தீந்தமிழால் அவனை நோக்கி.

பொன்னின் மணக்கும் புதுப்புனலிற்
　　புடைசூழ் பணில முத்தெடுத்துப்
புறக்கோட் டகமுண் டாக்கிவலம்
　　புரியைத் தூதைக் கலமமைத்துக்
கன்னி மணக்குங் கழனியிற்செங்
　　கமலப் பொருட்டு முகையுடைத்துக்
கக்குஞ் செழுந்தேன் உலையேற்றிக்
　　கழைநித் திலவல்சி யைப்புகட்டிப்
பன்னி மணக்கும் புதுப்பொழிலில்
　　பலபூப் பறித்துக் கறிதிருத்திப்
பரிந்து சிறுசோறடு மருமை
　　பாராய் அயிரா வதப்பாகன்
சென்னி மணக்குஞ் சேவடியால்
　　சிறியேம் சிற்றில் சிதையேலே
திரைமுத் தெறியுந் திருச் செந்தூர்ச்
　　செல்வா சிற்றில் சிதையேலே.

என்று பாடி இறைஞ்சுகின்றனர். ஆனால் செந்தூர்க்குமரன் காதில் ஏற்றதாகவேத் தெரியவில்லை, அவனுடைய தூக்கிய பிஞ்சுப் பாதங்களில் சிறுமியொருத்தியின் சிற்றில் பலியாகின்றது. வெற்றிப் புன்னகையுடன் அடுத்தவளின் சிற்றிலை நோக்கிச் செல்கின்றது. தங்களுடைய சிற்றிலின் பெருமைகளைக் கூறியதால்தானே இவன் அழித்தான். இனி இதனால் இவன் உடல் நோம் என்று கூறி அச்சுறுத்தினால் தன் வழிச் செல்வான் என்று எண்ணியவர்களாய் வீரத்துடன் தளர் நடையிட்டு வருபவனை நோக்கி, நீ சிற்றிலைச் சிதைக்கும் போது முத்துக்கள் உனது தண்டையணிந்த பொற்பாதங்களில் அழுந்தி வலியைத்தரும். தோளில் புழுதிபடியும், உன்னை அன்புடன் நினது அன்னையான உமையம்மை முகத்

துடன் சேர்த்து அணைக்கும்போது உன்கழலணிந்த கால்களில் உள்ள புழுதியானது அவளது வதனத்தில் படியும். அதற்காகத்தான் எங்கள் சிற்றிலையழிக்க வேண்டாம் என்று கூறுகின்றோமே தவிர வேறு ஒன்றுமில்லை என்றும் பொருள் பட அவனிடம்.

தையல் மடவார் இழைத்தவண்டல்
தன்னை யழிக்கும் அதுக்கல்ல
தரளம் உறுத்தி உனதுபொற்பூந்
தண்டைத் திருத்தாள் தடியாதோ
துய்ய தவளப் பிறைமுடிக்குந்
சோதி யெருத்து முகக்தணைத்துத்
தோளில் இருந்தும் பொழுதுகணித்
தோளிற் புழுதி தோயாதோ.

என்று பாடுகின்றனர். முன்னர் கூறியதில் அவர்களின் பெருமையினையும், பின்னர் கூறியதில் உலகத் தலைவனிடமும், தலைவியிடமும் தன்னிடமும் காட்டும் போலியன்பினையும் அறிந்த குமரன் அவர்களுக்குத் தன்னையுணர்த்துவதோடு மெய்யறிவும் தரவேண்டும் என்ற எண்ணம் கொள்கின்றான். எனவே அவர்களை ஒரு பொருட்டாக எண்ணுமல் தன் வேலையை முடித்துக்கொண்டு மூன்றுமவளின் இடத்திற்குச் செல்கின்றான்.

பின்னர்தான் சிறுமியர் விழித்துக்கொள்கின்றனர். தங்களால் ஏதும் செய்யமுடியாது என்பதையுணர்ந்து கொள்கின்றனர். தங்களைத் தாங்களே நொந்து நொந்து கொள்கின்றனர், பின்னர் அவனிடம் கூறுகின்றனர்.

என்றும் பொய்க்காத வளமையைத் தரும் சிறப்பும், புகழும் பெற்ற பொருநை நதியில் உன்னை நீராட்டி, வகைவகையான வனப்புடைய அணிகளால் உன் எழிலுடை மேனியை அலங்கரித்துப் பின்பு பாலூட்டி அணைத்து உச்சி முகர்ந்து விளையாடுமாறு தாயார்கள் உன்னைத் தனியே விட்டுவிட்டனர் அவ்வாறு உன்னைத் தனியே விட்ட அவர்களைத்தான் நாங்கள் நொந்து கொள்ள வேண்டுமே தவிர உன்னையல்ல. அதனால் பயனுமில்லை. அப்படி உன்னைக் கோபிக்கத்தான் எங்களுக்கு என்ன உரிமையுள்ளது. நாங்கள் துன்பத்துடன் பரற்கற்

களைக் கொழித்து எறிந்து விட்டுச் சுத்தமான மணலைக் கொண்டு இழைத்த எங்கள் மணல் வீட்டை உன் காலால் அழிக்கின்றாயே இது நியாயமா? எங்களைக் காத்து அருள் செய்பவன் நீதானே! காக்கும் தெய்வமும் ஆளும் அரசனுமாகிய நீ எங்கள் சிற்றிலையழித்து எங்களுக்கு மனவருத்தம் தந்தால் நாங்கள் என்ன செய்வோம்? பிறர் துன்புறுத்தினால் உன்னிடம் நாங்கள் முறையிடலாம், காக்கும் நீயே செய்தால் நாங்கள் யாரிடம்போய் முறையிடுவோம். உனது வழியடிமைகளாக விளங்கும் எங்கள் சிற்றிலை மிதித்துச் சிதைக்காதே என்று வேண்டுகின்றனர்.

பொய்யா வளமை தரும் பெருமைப்
பொருநைத் துறையில் நீராட்டிப்
பூட்டுங் கலன்கள் வகைவகையே
பூட்டி எடுத்து முலையூட்டி
மெய்யால் அணைத்து மறுகுதனில்
விட்டார் அவரை வெருமலுனே
வெறுக்க வேறு கடனு முண்டோ
விரும்பிப் பரலைக் கொழித்தெடுத்துக்
கையால் இழைத்த சிற்றிலைநின்
காலால் அழிக்கை கடலைகாண்
காப்பான் அழிக்கத் தொடங்கிலெங்கள்
கவலை எவரோ டினியுரைப்போம்
ஐயா உனது வழியடிமை
அடியேம் சிற்றில் அழியேலே
அலைமுத் தெறியுந் திருச்செந்தூர்
அரசே சிற்றில் அழியேலே.

என்று தன்னையுணர்ந்து குமரனே சரணம் என்று மனம் உருகிப்பாடி வேண்டும்போது அவனால் சிற்றிலையழிக்க முடியுமா? அழிக்கத்தான் மனம் வருமா? தனது குறும்பு விளையாட்டு ஒன்றின் மூலமாகவே சிறுமியரின் ஆணவத்தைப் போக்கும் குமரனின் அருள் உள்ளம்தான் எத்தகையது. தன் தவறுணர்ந்து வருந்தித் தன்னிடம் வருவோர்க்கெல்லாம் புகலிடம் தருபவன் அல்லவா அவன். அதனால்தானே தன்னைப் பாடிய வைணவர் ஒருவரின் பக்திக்கு உருகிச் சிறப்பு செய்ததோடு தீராத அவருடைய வயிற்றுவலியையும் தீர்த்து வைத்த

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

இன்பம் வேண்டும்?

''சைவநன்மணி தெய்வக்கவிமணி'' வித்துவான்:
திரு. க. சேதுராமலிங்கன், அவர்கள்;
தமிழாசிரியர், அரசினர் உயர்நிலைப்பள்ளி: இராமேச்சுரம்.

உலகில் எந்த மனிதனும் அல்லது எந்த உயிர்களும் விரும்புவது இன்பம் இன்பம் இன்பமே. இன்பமின்றி மாறுபட்ட துன்பத்தை எவரும் எதுவும் விரும்புவது இல்லை, இல்லை, இல்லை. ஆனால் உயிர்கள் தாம் விரும்பியது போல இன்பத்தையே அனுபவிக்கின்றனவா? என்றால் உறுதியாக இல்லை. பின், இன்பமும் துன்பமும் மாறி மாறியே வருகின்றன. ஆம், பகலும் இரவும், ஒளியும் இருளும், மருளும் தெருளும், இலாபமும் நட்டமும், புயலும் அமைதியும், துக்கமும் மகிழ்வும், செல்வமும் வறுமையும், இளமையும் முதுமையும் போல இன்பமும் துன்பமும் இணைந்தே நிற்கின்றன. இவ்விரண்டும் தானே பிரிவதும் இல்லை; மக்களால் பிரிக்கவும் முடியாது. ஆகவே, உலகில் வினைவயத்தால் தோன்றிய

(முன் பக்கத் தொடர்ச்சி)

அருட் கொண்டல் அல்லவா அவன். அந்த வைணவர் யார் என்கின்றீர்களா? அவர்தான் பகழிக்கூத்தர். அவர் பாடிய திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழின் தனிப்பெருந் தலைவனைக் குமரனின் குறும்பினைத்தான் மேலே கண்டீர்கள். சமயவேற்றுமையின்றி தன்னை வழிபடுவோரின் துன்பத்தைத் தீர்த்து வைக்கும் அவன் தன்னிடம் அன்பு கொண்ட ஒருவரைப் பேசவைத்து ஞானத்தையும் வழங்கியதில் வியப்பேதுமில்லை. வந்தவர்களுக்கு வாரிவழங்கும் வள்ளல் அவன். குமரகுருபரன் என்று போற்றப்படும் அவனை வணங்குவோம் வாழ்வோம்.

உயிர்களுள், இன்பத்தை மட்டுமே அனுபவிக்கும் உயிர்களும் இல்லை, அதுபோலவே துன்பத்தை மட்டுமே அனுபவிக்கும் உயிர்களும் இல்லை. எனவே இன்பமும் துன்பமும் ஒன்றை யொன்று தொடர்ந்து, மாறி மாறிச் சகடக்கால் போல வருவனவாகும். மனிதன் இன்பம் அனுபவிக்கும் போது அளவில்லா மகிழ்ச்சி கொள்கிறான். ஆனால் துன்பம் வரும்பொழுது வெயிலிடைப் பட்ட, அனலிடைப் பட்ட புழுவெனத் துடித்துத் தவிக்கிறான் பக்குவப்பட்ட உயிர்களோ என்றால், இன்பம் கண்டு மகிழ்வதும் இல்லை, துன்பம் கண்டு வருந்துவதும் இல்லை. வள்ளுவப் பெருந்தகை, இத்தன்மையைத் தம் பொய்யா மொழியில்,

"நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவது எவன்"

என்றும்,

"இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்"

என்றும் அழகாகக் கூறியருளினார்.

ஆயின், மக்கள் இன்பம் துன்பம் இரண்டையுமே சேர்த்துத்தான் துய்க்க வேண்டுமா? அன்றி, துன்பம் தொலைத்து, இன்பத்தை மட்டுமே துய்க்கமுடியாதா என்றால், ஒல்லும் வகையில் உறுதியாய் முயலின் துன்பம் துடைத்து இன்பமே எய்தலாம். இது பற்றியல்லவோ. நமது தமிழ்மா முனிவராம் சமயகுரவர் அப்பர் பெருமான் "இன்பமே யெந்நாளும் துன்பம் இல்லை என்று உறுதியாகக் கூறினார்.

இன்னும் நம் அருட்பெருங்குருவாம் அப்பர் பெருமான், மக்கள் இன்பம் எய்தும் வழிபற்றி என்ன கூறுகின்றார் என்று பார்ப்போம்.

இதோ ஒரு அறிவுடை மனிதன். இவன் தானாகவும் அறிவுடனே, ஒன்றும் செய்யான், பிறர் அறிவுரை கூறினாலும் கேட்கவும் மாட்டான். இத்தகையவனை என்னவென்று சொல்லுவது? அத்தகையவனை மூர்க்கன் என்று அப்பரடிகள் அருமையாக அழைப்பர். அப்படிப்பட்ட ஒரே புத்திசாலியிடத்தில் ஒரு மண்குடம் இருந்தது. அதன் அடியில் ஒரு

சிறு ஓட்டை. அவன் ஒரு நாள் நெடுந்தொலைவிலிருந்து, மிக அருமையாகக் கொண்டுவந்த தண்ணீரை அந்தக்குடத்தில் ஊற்றி நிரப்பலுற்றான். அதைக்கண்ட ஒருவர், அவனிடம் "அப்பனே! ஓட்டைக் குடத்தில் தண்ணீரை ஊற்றி வைத்தால் நிற்குமா? அது ஓடி விடுமே, என்றார். அதற்கு அந்தப் பேரறிஞன்! "குடத்தின் வாயைச் சிக்கென்று இறுக மூடி விடுவேன்" என்றுகூறி, சொன்னவர் வாயை மூடிவிட்டான். பின்னரே, குடத்தின் வாயையும் மூடினான். ஆனால், முன்னரே தண்ணீரும் ஓடிவிட்டது. இப்படியொரு முட்டாள் உண்டா? என்று நாம் எண்ணுகிறோம். இது தெரியாமல் ஒருவன் இருப்பானா? என்று நாம் பேசுகிறோம் அல்லவா?

ஆனால், இதைவிட மோசமாக, நாம் எத்தனையோ காரியங்களைச் செய்கிறோம். சிவனுக்கு அன்பு செய்யாமல், வேறு எத்தனையோ நல்ல காரியங்களைச் செய்து நாம் பிழைத்துப் போகலாம் என்று நினைக்கிறோம் அவையனைத்தும் ஓட்டைக்குடத்தின் வாயை மூடித் தண்ணீரை ஒழுகவிட்ட கதையாகவே முடியும். சிவனை வணங்கி அவனுக்கு அன்பு செய்யாது. பிற புண்ணியமான செயல்களைச் செய்து, பாவத்தைப் போக்க முயல்வதும், அவ்வாறே முடியும். இக்கருத்தைப் பாவநாசத்திருக்குறுந் தொகையில் அப்பர் அடிகள், அழகாகப் பாடித் தெளிவுறுத்தியிருக்கின்றார்.

"கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடினாலும் அரனுக்கு அன்பு இல்லையேல்
ஓடும் நீரினை ஒட்டைக் குடத்துஅட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோ டொக்குமே".

பழிபாவங்களும், தீவினைகளும், ஆசாபாசங்களும் அழிந்தொழிய வேண்டுமானால், சிவபெருமான் திருவடியை நினைந்து நினைந்து நெக்கு நெக்குருகி அவனையே வழிபடல் வேண்டும். அப்பொழுது அவன் நம்மைப் பாதுகாக்கும் பரமனாகி, மிக எளிதில் நம்பக்கலில்வந்து, உள்ளேபுகுந்து உயிரொடு கலந்து அருள் புரிவான். அவன் அருட்பார்வையிலே, நம்முடைய பாவமும் பழியும் பற்றுக்களும், வேரோடும் கெட்டு விலகி விடும். இவ்வாறின்றிப், பாவத்தைப் போக்க வேறுவழி கிடையாது.

"பாவமும் பழிபற்றற வேண்டுவீர்
ஆவில் அஞ்சு உகந்து ஆடும் அவன்கழல்
மேவராய் மிகவும் மகிழ்ந்து உள்குமின்
காவலாளன் கலந்தருள் செய்யுமே"

சிவன் சேவடிக்கு அன்பு பூணும் திறத்தை அற்புதமாக வெளியிட்டருள்கிறார் அப்பர் அடிகள். தாம்பாடிய முதற் பாடலிலேயே இக்கருத்தை உறுதியுடன் அறுதியிட்டுக் கூறுகிறார். "கூற்றாயினவாறு" என்னும் திருப்பாடலில், "ஏற்றாய், அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன் எப்பொழுதும்", என்கிறார். "பிரியாது" என்ற சொல், இங்கே "மறவாது" என்ற பொருளைத்தரும். இறைவன் திருநாமத்தை நாம் இடைவிடாது ஓதி அரற்றினால், அவன் மிக விரைவில் ஓடோடியும் வந்து நம் நெஞ்சில் விரும்பித் தங்குவான். அவன் நமது நெஞ்சில் பிரியாது தங்குவானாயின், அவனை நாம் மறக்க முடியுமா? அப்பர் அருள்வாக்கைப் பாருங்கள்:-

"ஈசன்ஈசன் என்று என்றும் அரற்றுவன்
ஈசன்தான் என்மனத்தில் பிரிவிலன்
ஈசன் தன்னையும் என்மனத்துக் கொண்டு
ஈசன் தன்னையும் யான் மறக்கிற்பனே"

அப்பர் அடிகள் முதற்பதிகத்திலேயே, "நெஞ்சம் உமக்கே" என்ற பாடலில் "நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன், நினையாது ஒரு போதும் இருந்தறியேன்" என்று கூறுவதை நோக்கலாம். கண் இமைப்பளவு நேரம்கூட, இறைவன் தமது நெஞ்சிலிருந்து பிரியமாட்டான் என்று, மணிவாசகரும் கூறவில்லையா? "இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க", அதுபோல, அப்பர் அடிகளும் "தினைத்தனைப்பொழுதும் மறந்து உய்வனோ" "எள் தனைப் பொழுதும் மறந்து உய்வனோ" என்று அரற்றுகின்றார். அல்லும் பகலும் இறைவனை எவ்வாறு ஏத்துவது என்பதனை விளக்கி, அப்பரடிகள் பாடி அருளியிருப்பதும் இங்கே நோக்கத்தக்கதாகும்.

"துஞ்சிருள் காலைமாலை தொடர்ச்சியை மறந்திராதே
அஞ்செழுத்து ஓதில் நாளும் அரன்அடிக்கு அன்பதாகும்,

வஞ்சனைப்பாற் சோறுக்கி வழக்கிலா அமணர்தந்த
நஞ்சு அமுதாக்கு வித்தார் நனிபள்ளி அடிகளாரே"

சிவனோடு நமக்குள்ள தொடர்பு, கணப்பொழுது கூட நீங்கிவிடக் கூடாது. அவ்விதம் தொடர்பை மேற்கொள்வதற்குத் திருவைந்தெழுத்தை இடைவிடாது ஓதல் வேண்டும். காலையும் மாலையும் நண்பகலும், இரவும் ஓயாது ஓதவேண்டும். அதுதான் சிவனோடு பிரியாமல், என்றும் பிரியாமல் இருப்பதற்கு உற்ற ஒரே வழி.

துஞ்சிருளில் தூக்கம் வருமோ? தூக்கத்தில் இறைவனை எப்படித் தொழ முடியும்? என்பது கேள்வி. அதற்கு விடை பகர்வது போல, அப்பரடிகள் பாடுகிறார்.

"துஞ்சும் போதும் துயிலின்றி ஏத்துவார்,
வஞ்சம் இன்றி வலம்கொள் மறைக்காடரோ
பஞ்சின் மெல்லடிப் பாவைபலி கொணர்ந்து
அஞ்சி நிற்பதும் ஐந்தலை நாகமே"

துஞ்சும் போதும் துயிலின்றி ஏத்துவதென்பது திருவைந்தெழுந்து மந்திரத்தை ஓதித் துதிப்பதாகும் இதனைப்பரசமய கோளரியாகிய சிவஞானக் குழந்தையாம் திருஞானசம்பந்தரும் குறிப்பிட்டுள்ளார்.

"துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடிவாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்சு எழுத்துமே"

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற அருளாளர்கள் தூங்கும் பொழுது, அவர்கள் உடல்தான் ஓய்ந்திருக்குமே தவிர உள்ளம் ஓயாது. இறைவன் மலரடியை நினைந்து, திருவைந்தெழுத்தை ஓதிக் கொண்டேயிருக்கும். இறைவனும் சிவனும் அவர்கள் உயிரோடு ஒன்றி நின்று விளையாடிக் கொண்டு இருப்பான். நான் உறங்கினாலும் இறைவன் உறங்காது என் நெஞ்சில் நின்று, என்உள் ஒளியைப் பெருக்கி என்னை நினைக்கச் செய்வான் என்று அப்பர் பாடியுள்ளார்:

"துஞ்சும் போதும் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை

நஞ்சு கண்டத்து அடக்கிய நம்பனை
வஞ்சனேன் இனிநான் மறக்கிற் பனே''

நான் உறங்கினுலும் தான் உறங்காது என் நெஞ்சில் இருந்து கொண்டு, நல்லனவற்றையே நினைந்து நினைந்து செய்து கொண்டு இருக்கும் நீதியும் நம்பிக்கையுமுள்ள கடவுளை நான் எப்படி மறப்பேன்'' என்று அப்பர் உருகுவது இப்பாடலில் நன்ருக நமக்குப் புலன் ஆகிறது.

மனிதன் கண்விழித்திருக்கும் பொழுது, தக்க பாதுகாப்புக்களைக் கொண்டவனுக விளங்குகின்ருன். தனக்குமிகவும் வேண்டிய பொருள்களிடத்தும், உயிர்களிடத்தும், மறவாமல் நெகிழாமல். சோர்ந்து விடாது கவனம் செலுத்திய வண்ணம் இருக்கின்ருன். ஆனுல் உறக்கம் வந்து விட்டால், எல்லாவற்றையும் மறந்து விடுகிருன். பெட்டிச் சாவி கையை விட்டு நழுவி விழுந்து விடுகிறது. தன் உயிரைக்கூடப் பாதுகாக்கும் நினைவின்றி, அறிவின்றி நெறியின்றி திறனின்றிப் பிணம் போலக் கிடக்கின்ருன். ஒவ்வொரு நாளும் மனிதன் உறுகின்ற உறக்கம், இன்ன வேளையென்றில்லாமல் திடீரென்று வரப்போகும் சாவை எதிர் கொள்வதற்குரிய ஒத்திகையேயாகும். நல்ல உறக்கம் கொண்டவனை, மெய்மறந்து உறங்குகின்ருன் என்பார்கள். தன்னைப் பற்றியும் நினைவிழந்த அந்த நிலையில், அவன் வேறு எவரைப்பற்றி நினைக்கப் போகிருன்? கனவு நிலையில் ஏதேனும் கனவுக் காட்சிகள் வந்துபோகலாம் அந்தக் கனவு நிலையும் தாண்டித் துரியம் துரியாதீதம் ஆகிய நிலைகளில் ஒன்றுமே நினைவிருக்காது. ''அந்த நிலையிலும் நான் இறைவனைக் கைவிட மாட்டேன்'' என்று உடல்சிலிர்க்க உளம் உருகப் பாடுகிருர் அப்பர் அடிகள்.

''மண்பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்
விண்பொருந்து தேவர்க்கும் வீடுபேருய் நின்ருனைப்
பண்பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனை யென்
கண்பொருந்து போழ்தத்தும் கைவிட நான் கடவேனே''

இன்பத்தையும் துன்பத்தையும், இறப்பையும் பிறப்பையும் வைத்தவன் சிவபெருமானே. அத்தகைய பெருமானை, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி; அன்பனே, அரனேயென்று

அரற்றும் அடியவர்கட்கு, இறைவன் என்றும் நீங்காது, அவர் தம் உள்ளத்தில் ஒன்றிக் கலந்து, இன்பம் தருபவனுகவே இருப்பான். இதனை நாவரசர்,

"இன்பமும் பிறப்பும் இறப்பின் னொடு
துன்பமும் உடனே வைத்த சோதியான்
அன்பனே அரனே யென்று அரற்று வார்க்கு
இன்பன் ஆகும் எறும்பியூர் ஈசனே"

என்று கூறுகின்றார்.

சிவனை ஏத்தும் நாள் இன்பம், ஏத்தா நாள் துன்பம். சிவனைப் போற்றும் நாள் இன்பம், போற்ருத நாள் துன்பம். சிவனை எண்ணும் நாள் இன்பம், சிவனை எண்ணுத, நாள் துன்பம். சிவனும் சீவனும் கலக்கும் நாள் இன்பம்; கலக்காத நாள் துன்பம். இதோ அப்பர் பெருமான் வாக்கைப் பாருங்கள்:-

"துன்பம் நும்மைத் தொழாத நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை ஏத்தும் நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரைநாளால் அதுவண்ணம்"

எனவே, சிவனை ஏத்தாதநாள் பிறவாத நாள், பெரும் பற்றப்புலியூரானுகிய சிவன் புகழைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே; "என்தங்கமான ஈசன் சிவபெருமான்", "என்உயிரான ஈசன் சிவபெருமான்" "என்வாழ்வான ஈசன் சிவபெருமான்", என்று சிவபெருமானையே இரவும் பகலும் இடைவிடாது தொழுதால், அவன் நமக்கு மிக வேண்டிய அன்பனுகி வந்து, துன்பமும் துயரமும் துடைத்து இன்பம் அளிப்பான்.

ஆகவே, புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல் விருகம்ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்ச், வல்லசுரராகி முனிவராய்த் தேவ ராய்ச், செல்லாநின்ற இத்தாவர – சங்கமத்துள், எல்லாப் பிறப்பும் பிறந்து பிறந்து இளைத்த, ஏ மக்களே! "இன்பம் வேண்டுமானுல் இதோ"! என்று அழைக்கிருர் அப்பர் அடிகள்:–

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]

சிறு தெய்வ வழிபாடு

திரு: ஆ. சண்முகநயினார்: அவர்கள்,
திட்ட அலுவலர் [A .R. C.]
திருச்சி.

1973 சூலை 10-ம் நாள் திருநெல்வேலியில் இருந்தேன், நெல்லையப்பர் திருக்கோவிலில் திருவிழாக் காலம் எனவே வழிபாட்டுக்காகச் சென்றேன். கோவிலை நோக்கிப் பெருங் கூட்டம் சென்று கொண்டிருந்ததைக் கண்டு உண்மையிலேயே மகிழ்ந்தேன் ஆனால், கோவிலுள் சென்று வழிபட்ட பொழுதுதான் பெரும் ஏமாற்றம் ஏற்பட்டது. கருணையே உருவான காந்தியம்மை திருமுன்போ, ஞானமூர்த்தியாகிய ஆலமர்கடவுள் திருமுன்போ, முழுமுதற் கடவுளாகிய நெல்லையப்பர் திருமுன்போ, அருமையான காட்சி அருளும் அறுமுகச் செவ்வேள் திருமுன்போ கூட்டமே இல்லை. பின், கூட்டம் எல்லாம் எங்குதான் சென்றது? ஒன்பான்கோள்கள் (நவக்கிரகங்கள்) முன்பு எள் போட்டால் எள் விழாத கூட்டம், இடைவிடாத மலர் வழிபாடு பெரிய குண்டத்தில் எள் விளக்குகள். நெல்லை நகரே அங்கு திரண்டு வந்திருந்தது

(முன் பக்கத் தொடர்ச்சி)

"துன்பம் இன்றித் துயர்இன்றி என்றும்நீர்
இன்பம் வேண்டில் இராப்பகல் ஏத்துமின்,
என்பொன் ஈசன் இறைவன் என்று உள்குவார்க்கு
அன்பன் ஆயிடும் ஆனைக்கா அண்ணலே"

நாமும் அப்பர் பெருமானின் அன்பு கலந்த அருள் மயமான அழைப்பினை ஏற்று, நாளும் நாளும், சிவனையே நினைந்து நினைந்து "இன்பமே எந்நாளும்" என்ற உயரிய நிலையை அடைவோமாக; அடைந்து வாழ்வோமாக; வாழ்ந்து உய்வோமாக; இந்நிலையெய்த இறைவன் திருவருள் துணை செய்யுமாக.

அப்பர் பெருமான் திருவடிகளே சரணம்

போன்று தோன்றிற்று. ஆம்! அன்று சனிப்பெயர்ச்சி நாள் அன்னையை, அறுமுகனை, அப்பனை வழிபடுவார் இல்லை, ஆனால் இந்த "ஒன்பான் கோள்களை" வழிபடப் பெருங் கூட்டம். இதைப் போன்று நூறு அல்லது ஆயிரம் மடங்கு கூட்டம் திருநள்ளாறு சென்றிருக்கும் என்பதையும் நினைந் தேன். திருநள்ளாறு செல்வது எதற்காக? நளன் நலிவு தீர்த்த நள்ளாற்றுப் பெருமான் தர்ப்பாரண் யேசுவரரை வழிபட அல்ல. நளனுக்கு நாளும் இடர்தந்த சனீசுவரனை வழிபடு வதற்காக. இந்த நிலை போற்றத் தக்கதுதானா? இதுநம் சமயா சாரியார்களுக்கு உடன் பாடானதுதானா? சற்றே சிந்திப் போம்.

அப்பர் பெருமான் கருத்து:

சைவசமய நெறிகளை ஐயம்திரிபு இன்றித்தம் தேவாரத் பல இடங்களில் அறுதியிட்டுக் கூறியவர் அப்பர் பெருமான். அவர் கூறுகிறார்:

'என்றும் நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம்
இருநிலத்தில் எமக்கெதி ராவாரு மில்லை
சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம்
...."

(மறுமாற்றத் திருத்தாண்டகம்)

சிறுதெய்வம் என்ற தொடருக்குச் செத்துப் பிறக்கின்ற தெய் **வங்கள்** என்று பொருள் தருகிறது காசிமடம் பதிப்பு: சிறு தெய்வ வழிபாடு அப்பருக்குச் சிறிதும் உடன்பாடானதல்ல என்பது தெளிவு.

மணிவாசகப் பெருமான் கருத்து:

வாதவூரடிகள் இன்னும் சற்று அழுத்தமாகவே கூறுகிறார்.

"கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடி கெடினும்
நள்ளேன் நினதடியா ரொடல்
லால் நரகம் புகினும்
எள்ளேன் திருவருளாலே
இருக்கப் பெறின் இறைவா
உள்ளேன் பிறதெய்வ(ம்) உன்னையல்
லாதெங்கள் உத்தமனே" (திருச்சதகம்-2)

உன்னையன்றிப் பிற தெய்வங்களை உள்ளத்திலும் நினையேன் என்பது மட்டுமல்ல. இந்திரன், திருமால், அயன் ஆகியோர் வாழ்வு தந்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று கூறும் உறுதி நினைந்து நினைந்து போற்றந் தக்கது.

"பச்சைத்தாள் அரவாட்டி
　　படர்சடையாய் பாதமலர்
உச்சத்தார் பெருமானே அடியேனை
　　உய்யக் கொண்டு
எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே
　　அச்சோஎன்
சித்தத்தாறுய்ந்த வாறன்றேஉன்
　　திற நினைந்தே" (திருவேசறவு-4)

இங்கும் சிறு தெய்வ வழிபாட்டை அடிகளார் கண்டிக்கிறார்.

பிற கருத்துகள்:-

நம் சமயாசாரியார்கள் கருத்துகளைக் கண்டோம். இனி பிற சில கருத்துகள் காண்போம்

கீதை கூறுகிறது:-

"பற்பல ஆசைகளால் அறிவை இழந்தவர்கள், அவரவர் இயற்கையால் தூண்டப்பட்டு, அதற்கேற்ற நியமத்தைக் கையாண்டு பிற தெய்வங்களைப் போற்றுகின்றனர்" (7 : 20) பிற தெய்வங்களைப் போற்றுகிறவர்களைப்பற்றி கீதையின் கணிப்பு "ஆசைகளால் அறிவிழந்தவர்கள்" என்பது.

மேலும் சிறு தெய்வ வழிபாட்டின் பயன் பற்றி கீதை கூறுகிறது:-

"தேவர்களைத் தொழுபவர் தேவர்களை அடைகின்றனர்; பிதிர்களைப் போற்றுபவர் பிதிர்களை அடைகின்றனர்; பூதங்களை வணங்குபவர் பூதங்களைப் போய்ச் சேர்கின்றனர்; என்னைப்(இறைவனை) பூஜிக்கின்றவர்கள் என்னையே எய்துவார்கள்" (9 : 25) ஒன்பான் கோள்களைப் போய்ச் சேர்வது தானா நம் குறிக்கோள்? இதையொட்டி சுவாமிசித்பவானந்தர் கூறும் விளக்கம் நினைவுகூரத்தக்கது. "ஓர் அரசாங்கத்திலுள்ள சிறு உத்யோகஸ்தர்கள் அரசனுக்கு அடிமைப்பட்டவர்களே. அரசனுடைய நட்பைப் பெற்றால், சிப்பந்திகள்

அனைவரும் நமக்கு உரியவர் ஆகிவிடுகின்றனர். ஆனால் அரசனது நட்பைப் பெறுவதற்கு நாம் தகுந்தவர் ஆகவேண்டும். அதில் சிரமம் அதிகம் சிறு உத்யோகஸ்தர் நட்பைப் பெறுவது எளிது. அவர்களைக் கொண்டு ஆகவேண்டிய காரியங்களை முடித்துக்கொள்ளுதலும் எளிது அதேபோன்று சிறு தெய்வங்களை வணங்கி சிறிய பலனை அடைவது எளிது''. சிறுதெய்வ வழிபாட்டின் மூலம் சொற்ப பலன்களே பெற முடியும் என்பதும் நம் இலக்கு உயர்ந்ததாயின் அது பயன் படாது என்பதும் தெளிவு.

உலகியலை ஒட்டி இவ்விடத்து ஓர் ஐயம் எழக்கூடும். உலகியலில் பெரிய அலுவலர்களை, அவர்களின் கீழ்ப்பணியாற்றும் ''சிறு தேவதைகள்'' மூலம்தானே அணுக இயல்கிறது. இந்த நடைமுறை இறை நெறிக்கும் பொருந்தாதா என்று தோன்றும். சற்றும் பொருந்தாது என்பதே உண்மை. அந்த ஒப்பற்ற 'ஒருவன்' முன்பு திருமால், அயன், இந்திரனும், நீங்களும் நானும் யாவருமே ஒத்த நிலையினர்தாம், சொல்லப் போனால், அவனுக்கு நம்மிடம் தனிக்கருணையும்கூட. கருவூர்த்தேவரின் கருத்து ஒன்றை இங்கு நினைவுகூர்தல் தகும்.

'பாம்பணைத் துயின்றோன் அயன் முதல் தேவர்
பன்னெடுங்கால நிற்காண்பான்
ஏம்பலித்திருக்க என்னுளம் புகுந்த
எளிமையை என்று நான் மறக்கேன்.''

(திருப்பூவணத்திருவிசைப்பா)

சிவபெருமானைக் காண்பதற்காக நீண்ட நெடுங்காலம் ஏங்கியிருக்கின்றனர் திருமால், அயன் முதலானோர். ஆனால் அவனோ கருவூர்த்தேவருடைய உள்ளத்தில் குடிபுகுகின்றான். இந்த எளிமைதான் நம் சமயத்தின் தனிச்சிறப்பு. திருமாலே இந்த நிலையில் இருக்க' ஒன்பான் கோள்கள் நமக்கு என்ன பேருதவி செய்யக்கூடும்? இறைவன் திருவருளைப்பெறுவதற்கு அவனை ஏத்துதலே போதும். சிறு தெய்வங்களின் துணை தேவையில்லை என்பதை அறிகிறோம்.

கோழிக்கூடு செய்யும்பொழுது கோழிக்கு ஒரு வாயில் குஞ்சுக்கு ஒரு வாயில் சமைத்த அறிஞரைப்பற்றிக் கேட்டிருக்கிறோம். கோழி செல்லும் வாயிலில் குஞ்சும் சென்று

விடாதா என்பது அன்று அவனுக்குத் தோன்றவில்லை. முழு முதற்பொருளுக்கும் வழிபாடு. அவன் ஆணைக்குட்பட்ட சிறு சக்திகளுக்கும் வழிபாடு என்று நடந்து கொள்ளும் நமக்கும் முன்னே சொன்ன அறிஞருக்கும் என்ன வேறுபாடு? அதற்கும் மேலாக அந்த முழுமுதற்பொருளையே மறந்து விட்டு, 'ஒன்பான கோள்களையே சுற்றிச்சுற்றித் திரியும் இந்த நிலை பெருமை தருவதுதானு?

"கோள்கள் யாவுமே அடியார்க்கு நல்லன" என்று அறைகூவிய காழிப் பெருமான் தோன்றிய நாட்டில் "நாள் என்செயும்? கோள் என்செயும்? என்று முழக்கமிட்ட அருணகிரியார். தோன்றிய நாட்டில் அண்மைக் காலமாகச் சிறு தெய்வ வழிபாடு பெருகி வருவது வேதனைக்குரியது. நம் சமயத்துக்கு மாசு தேடுபவற்றில் சிறு தெய்வ வழிபாடும் ஒன்று. இதற்குக் காரணம்தான் என்ன? "இந்தக் கோள் நமக்கு ஆகாது ஆயிற்றே" என உள்ளத்தின் மூலையில் ஓர் அச்சம் "இதைச் "சரிக்கட்டினுல்" துன்பம் குறையுமே" என்ற நப்பாசை. இந்த பலவீனத்தை வளர்த்து வரும் ஒரு தன்னலக் கூட்டம். இவைதாம் இன்றைய அவலநிலைக்கே காரணம். சிவமன்றி வேறு சிந்தியாத பல பெரியோர்கள்—சமயத் தலைவர்கள் கூட-கிரகசாந்தி, ஒன்பான் கோள் வழிபாடு என்று ஈடுபடுவது நமது தீவினைப் பயனே. நால்வர் தேவார, திருநாவுக்கரசர்களை நமது நாதான் கூறுகின்றதே தவிர நம் உள்ளம் அவற்றில் தோயவில்லை என்று தோன்றுகிறது. உண்மையிலேயே நமக்கு நால்வரிடம் நம்பிக்கை இருக்குமாயின், நாமும் அப்பருடன் சேர்ந்து "சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோமல்லோம்" என்றுஉறுதி கொள்வோமாக!

———

ஆண்டவன் இருக்கின்றான்

திரு எஸ்; வீ ஆர். தாத்தாச்சாரி; அவர்கள்,

ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்
அண்ட சராசரம் காக்கின்றான்
அணுவிலு மணுவாய் அவனுள்ளான்
அன்பெனும் பிடியுள் அடங்கிடுவான்.

சிற்பத்தில் கலைஞன் வடிக்கின்றான்
விற்பனன் வேதத்தில் படிக்கின்றான்
கற்பவன் கருத்தில் ஏற்கின்றான்
அற்பனும் அதையே மறுக்கின்றான்.

இறைவன் எங்குளன் எனக்கேட்ட
இரணியன் கம்பந் தனைச்சாட
நரசிங் கமெனும் உருவோடே
பிரக்லா தனையே ஆட்கொண்டான்.

அழுத பிள்ளை குரல்கேட்ட
பொழுதே ஞானப் பாலூட்ட
காழியம் பதியில் உமையோடே
மழலைக் காங்கே அருள்செய்தான்.

சாத்திர மெல்லாம் பொய்யென்பார்
மூர்த்த மெல்லாங் கற்பனையென்பர்
நாத்திகம் பேசும் நாவிலெல்லாம்
நர்த்தனம் செய்யும் நாதனவன்.

ஈசன் என்றே சொல்வோரும்
ஏசு அல்லா என்போரும்
பேசும் தெய்வம் ஒன்றெனவே
நேசம் கொண்டே வாழ்ந்திடுவோம்.

அரசு ஒன்றே யென்றாலும்
பிரிவு பலவே உள்ளதுபோல்
இறைவன் ஒன்றே யென்றாலும்
உருவம் பலவே கண்டிடுவார்.

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ

அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்

-o-

8. பித்தா என்ற பெருமகனார்?

கிழவனாக வந்த அப்பெருமானைத் தொடர்ந்து ஓடி, அவர் கையிலிருந்த ஓலையைப்பிடுங்கி "அந்தணர் அடிமையாக வேண்டும் எனக்கூறுவது முறையா?" எனக்கிழித்து எறிந் தார் நாவலூரார் வேதம் முறையிடக்கிடைக்காத பெருமான் "இப்படிக்கிழித்தல் முறையோ" என முறையிட்டார். பக் கத்திலிருந்தவர் "உலகில் இல்லாத வழக்குச் செய்யும் நீங்கள் எங்கிருக்கின்றீர்?" என்ன "இங்குள்ளேன். (அவர் எங்கும் இருப்பதைக் குறிப்பிட்டார்) அதுவும் வெகு தூரத்தில் இல்லை பக்கத்திலுள்ள வெண்ணெய் நல்லூர்தான். அதிருக்கட்டும். நேர்மைக்குப் புறம்பாக என் கையிலிருந்த ஓலையைக் கிழித்து, இவன் எனக்கு அடிமை என்பதையும் தானாகவே காட்டி விட்டான்" என்றார். இது கேட்ட ஆரூரர், "இவன் பழைய மன்றாடி போலும்" என நினைத்தார். மன்றாடி என்பது வழக் கறிஞர், (வக்கீல்). அனுபவமிகுந்த வக்கீல் போலும் என எண்ணினார், முன் செய்த நல்வினைப்பயனால் "பழையமன் றாடி" யாகிய மன்றுளாடும் நடராசப்பெருமானை "சிவ பெருமானே" என எண்ணினார் என்றும் கூறலாம். அவரிடம்

(முன் பக்கத் தொடர்ச்சி)

பாலில் வெண்ணெய் மறைந்திருக்கும்
கடலில் உப்பும் கரைந்திருக்கும்
உடலில் உயிரும் உள்ளதைப்போல்
உலகில் இறைவன் கலந்திருப்பான்.

இறைவன் எங்கும் இருக்கின்றான்
உறைவிடம் தனியே வேறுண்டோ
இரணியன் தூணில் கண்டதுபோல்
அரசினர் ஏழை சிரிப்பில்கண்டார்.

கோபம் உண்டான போதிலும் மனம் அவரிடம் ஈடுபட்டது. "வெண்ணெ நல்லூராகில் அங்கேயே வழக்கைப் பேசலாமே" என்றார், ஆரூரர், "அதுவும் நல்லதுதான். அங்கு என்னிடம் மூல ஓலையுள்ளது. நீர் கிழித்து எறிந்தது நகல்தான்" என்று தண்டையூன்றிச் சென்றார் கிழவர், காந்தத்தைத்தொடர்ந்து செல்லும் இரும்பைப்போல ஆரூரரும் பின்தொடர, அவரது சுற்றத்தாரும் இதன் விளைவு காண எண்ணிச்சென்று வெண்ணெநல்லூரை அடைந்தனர். அங்குள்ள அந்தணர்கள் "வேதியர்கள் பிறருக்கு அடிமையாகும் வழக்கம் கிடையாது. என்ன சொல்லுகிறீர்?" என்ன, அக்கிழவர் "இவனது பாட்டன் கொடுத்த ஓலை அது. அதில் இசைந்துதானே எழுதப் பட்டிருந்தது? மேலும் அந்த ஓலையைக் காட்டினால் அதை வாங்கிக் கிழிப்பது நியாயமாகுமா? என்ன "அந்தணர்கள்" கிழவர் சொல்லுவது நியாயமாகவே படுகிறது. ஆரூரரின் கருத்து என்ன? என்றனர். "எல்லாம் உணர்ந்தவர்களே! நான் ஆதிசைவன் என்பது நீங்கள் அறிந்ததே. நான் அடிமை யாகத்தான் வேணுமென்று இப்பெரியவர் கூறினால் அது என்ன விதமான மாயமென எனக்குப் புரியவில்லை" என்றார் ஆரூரர், இது கேட்ட சபையினர் "ஆரூரர் உமக்கு அடிமை என்பதை நீர் எமக்கு நிரூபிக்க வேணும்" என்றனர். "வழக்க மான செய்கை என்றோ, எழுத்து மூலமான சாட்சியாகவோ அயலவர் எவராவது நேர்முகமோ இதற்கு சாட்சி கூறல் வேணும்" என்றும் அவர் கூற, வந்த பெரியோர் "ஆரூரர் கிழித்த ஓலை படி ஓலை (Copy) என்னிடம் மூலவோலை உள் ளது" என்றார்.

ஆட்சியில்; ஆவணத்தில்? அன்றி மற்றயலார் தங்கள்
காட்சியில் மூன்றில் ஒன்று காட்டுவாய் என்ன "முன்னே
மூட்சியில் கிழித்த ஓலை படியோலை மூல வோலை
மாட்சியில் காட்ட வைத்தேன்" என்றனன் மாயை வல்லான்.

மூல ஓலையைக் காட்டுமாறு வெண்ணெ நல்லூர் மறை யவர் கேட்க, "ஆரூரன் அதையும் கிழித்தால் என்ன செய் வேன்?" என்று கிழவர் கேட்க, சபையினர் "ஆரூரன் உமக் குத் தீங்கு செய்யாமல் காப்போம் மூல ஓலை காட்டும்" என்ற னர். அந்நிலையில் கிழவன் தன்னிடமிருந்து ஒரு ஓலையை

எடுத்து அங்கிருந்த கணக்கப்பிள்ளையிடம் கொடுத்தார். இறைவன் கையிலிருந்து ஓலையை வாங்கிய அந்த உத்தியோகஸ்தனை "அருள் பெறு கரணத்தான்" எனக் குறிப்பிடுகிறார், (கரணத்தான் என்ற சொல் நாளடைவில் கர்ணம் என மருவியது போலும்!) உத்தியோகஸ்தன் அந்த ஓலையிலிருந்த வாசகத்தைப் படிக்கிறான். "நாவலூரிலுள்ள ஆதி சைவனாகிய ஆரூரன் வெண்ணைநல்லூர்ப்பித்தனுக்கு மனப்பூர்வமாக என் கையால் எழுதிக்கொடுப்பது: நானும் என் குடும்பத்தினரும் குல முறையாக வழிவழியாக அடிமையாகிறோம்,':

அருமறை நாவல் ஆதிசைவன் ஆரூரன் செய்கை
பெருமுனி வெண்ணெய் நல்லூர்ப்பித்தனுக்கு யானும் என்பால்
வருமுறை மரபுளோரும் வழித்தொண்டு செய்தற்கு ஓலை
இருமையால் எழுதி நேர்ந்தேன் இதற்கிவை என் எழுத்து.

சாட்சிக் கையெழுத்துக்களுடன் கூடிய அவ்வோலையை சபையினர் ஆராய்ந்து ஒப்புக்கொண்டனர். ஆரூரரிடம் "இது உங்கள் பாட்டனார் கையெழுத்துதானா?" எனக்கேட்க, தடுத்தாட் கொள்ள வந்த தரும நாயகனான பெரியவர் (வலிய ஆட்கொள்ளும் வள்ளல்" எனக்குறிப்பிடுகிறார் சேக்கிழார்) "இவனுக்கு எப்படித் தெரியும்? இவன் வீட்டில் இவனது பாட்டனது கையெழுத்து ஏதாவது இருந்தால் ஒப்பு நோக்குங்கள்" என்றார், திருநாவலூரார் தன்னிடம் பழைய ஓலை ஏதும் இல்லாததால் கலங்க, சபையினர் தங்களது அரண்தருகாப்புள் (Record Room) உள்ள ஒரு பழைய ஓலையை எடுத்து வந்து காட்ட எழுத்துச் சரியாக இருந்தது வேறு வழியில்லாததால் ஆரூரர் அந்தக்கிழவனுக்கு அடிமையாதல்தான் வழி எனச் சபை தீர்ப்புக்கூற ஆரூரர் அதற்கு இணங்கினார். அப்போது வெண்ணைநூல் வேதியர்கள் "நீர் இந்த ஊர் என்கிறீரோ? உம்முடைய இருப்பிடம் எது?" எனக்கேட்க, வாருங்கள் காட்டுகிறேன் என அழைத்துச் சென்ற பெரியவர் திருவெண்ணெய் நல்லூர் கோயிலுள் சென்று மறைந்தார். திடீரென இறைவன் ரிஷபவாகனத்தில் அம்மையோடு நாவலூராருக்கு காட்சியளித்தார், கிழவனாக வந்தது திரோதன சக்தியால் ஆட்கொண்டது. அம்மையுடன் ரிஷப வாகனத்தில் காட்சிகொடுத்தது அருள் சக்தியுடன் வந்து செய்த கருணை என்பது குறிப்பு.

பக்குவமடைந்த நாவலூரார் மட்டும் இறைவனைக்கண்டார். மற்றவருக்குக் காட்சி கிடைக்கவில்லை என்பதும் அறியத் தக்கது. "முன்பே நமக்கு நீ அடிமை, மண்ணிற் பிறந்து துன்ப வாழ்க்கை வாழ இருந்த உன்னைத் தடுத்தாட் கொண்டோம்;" என்றார் இறைவன். இது கேட்டு தாய்ப்பசுவின் குரல்கேட்ட கன்று மாதிரிஉருகி திடுக்கிட்ட நாவலூராரை" நம்மிடம் வன்மையாகப் பேசியமையால் உனக்கு வன்றொண்டன் எனப் பெயர் வழங்கட்டும். நமக்கு அருச்சனை அழகான பாடல்களேயாகும் எனவே நம்மீது அழகிய தமிழ்ப் பாடல்கள் பாடுக" என்று கூறினார் வேதம்பாடும் வாயுடைய வித்தகரான சிவபெருமான். இது கேட்டு உருகிய ஆரூரராகிய வன்றொண்டர்"பெருமானே! ஒன்றுமறியாத இந்த ஏழை உன்னை எப்படிப் பாடுவேன்?" என்றனர், "முன்பு நீ நம்மை பித்தா எனக் கூறினாய். எனவே பித்தா என்று பாடு" என்றனர் இறைவன்.

அன்பனை அருளின் நோக்கி அங்கணர் அருளிச் செய்வார்
"முன்பெனைப் பித்தன் என்றே மொழிந்தனை ஆதலாலே
என்பெயர் பித்தன் என்றே பாடுவாய்" என்றார்: நின்ற
வன்பெருந் தொண்டர் ஆண்ட வள்ளலைப் பாடலுற்றார்.

"பித்தா" என இறைவனை அழைக்கலாமா? என அன்பர்கள் நினைக்கக்கூடும். பித்தா என்பது உயர்ந்த சொல், பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு என்று ஒரு பழமொழி. மகன் எவ்வளவு கடிய மனமுடையவனானாலும் தாய் மகனிடம் அதிகப் பாசமுள்ளவள் என்பது பொருள். பித்தா என்பது தாயுள்ளம் கொண்டவனே! என்று பொருள் கொள்ளல் வேண்டும். இறைவனை அன்னையை மறந்து திருமணஞ் செய்து கொள்ள இருந்த நாயனாரை துன்புறுவாழ்க்கை தொடராதுதடுத்தாட் கொண்ட தாயுள்ளம் கொண்டவன் இறைவன் என்பது உண்மையன்றோ?

பித்தன் என்று ஏன்பெயர் வந்தது என்று பெரியோர்கள் பல காரணங்கள் கூறுகின்றனர். பெண்கள் மீது வைத்த ஆசையில் லட்சத்தில் ஒருபங்கு உன்மீது வைத்தால் நீ நற்கதி யளிக்கிறாய். இப்படிப் பட்ட நின்எளிய கருணையைக் கண்டு உலகம் உன்னை பித்தன் (ஒன்றுமறியாதவன்) என்று பேசுகிறது போலும்!

தத்தையங் கனையாள் தங்கள்மேல் வைத்த
தயவை நூருயிரம் கூறிட்டு
அத்தில் அங்கு ஒருகூறு உன்கண் வைத்தவருக்கு
அமருலகளிக்கு நின் பெருமை
பித்தனென்று ஒருகால் பேசுவரேனும்
பிழைத்தவை பொறுத்தருள் செய்யும்
கைத்தலம் அடியேன் சென்னி வைத்த கங்கை
கொண்ட சோளேச் சுரத்தானே.

என்ருர் ஒன்பதாம் திருமுறையில் கருவூர்த்தேவர்.

''அளவில்லாத குற்றங்களைச் செய்தாலும் பொறுத்தருளும் அன்னையே! இறைவன் உன்னைப் பாதி உடம்பிலே வைத்துக் கொண்டான். மூன்றே பிழைகளைப் பொறுக்கும் கங்கையைத் திருமுடியில் ஏற்றுக் கொண்டான். அளவில்லாத குற்றங்களையும் பொறுக்கும் அன்னையான உன்னையன்ருே தலையில் தூக்கி வைத்துக் கொள்ள வேணும்! இப்படி அறியாது செய்ததால் தான் போலும் உலகினர் அப்பெருமானைப் பித்தன் எனப் பெயரிட்டழைக்கின்றனர்.

அளவறு பிழைகள் பொறுத்தருள் நின்னை அணியுறப்பாதியில் வைத்தான்
தளர்பிழை மூன்றேபொறுப்பவள் தன்னைச்சடைமுடிவைத்தனன் அதனுல்
பிளவியல் மதியஞ்சூடிய பெருமான் பித்தனென் ருெருபெயர் பெற்ருன்
களமர் மொய்கழனி சூழ்திருவானைக் காவகிலாண்ட நாயகியே.

என்று மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்கள் தமது அகிலாண்ட நாயகி மாலையில் பாடுகிருர்.

தேவாரத்தில் ''பித்தா'' என்ற சொல்லுக்கு தாயுள்ளம் கொண்டவனே! என்ற பொருள் கிடைக்கிறது. சந்திரனுக்கு இருபத்தேழு மனைவியர். அவர்களில் ரோகிணி என்ற மனைவியின் மீது அதிக அன்புகாட்டி மற்றவர்களை அன்பில்லாது, நடத்த, மற்ற இருப்பத்தாறு பெண்களும் கணவனுக்கு புத்தி கூறுமாறு தங்கள் தந்தையான தக்ஷனிடம் வேண்டினர். தக்ஷன் சந்திரனை அழைத்துப் பேசுங்கால், சந்திரன் தனது மாமனுராகிய தக்ஷனிடம் மரியாதைக் குறைவாகப் பேசினுன். அதனுல் சீற்றமடைந்த தக்ஷன்; முன் சோபத்தில் என்ன கூறுகிருேம் என்பதை அறியாமல் ''இன்றுமுதல் ஒவ்வொரு கலையாகக் குறைந்து கடைசியில் ஒன்றுமில்லாமல் தேய்ந்து

அழிவாயாக!" எனச் சாபமிட்டான். சந்திரன் தேய்ந்து, கீற்றுப் பிறையாக ஒரே கலையுடன் வருந்தி சிவபெருமானை யடைய சிவபெருமான் இரக்கமடைந்து "சந்திரனே! உன் மாமன் கூறிய வண்ணம் 15 நாட்கள் தேய்ந்து, என்னை அடைந்தவர் வளர்ந்து மகிழ்வர் என்பதைக் காட்டுவது போல் 15 நாட்கள் வளருக. மீண்டும் மீண்டும் தேய்ந்து தேய்ந்து வளருக!" எனக் கூறினர். அதனுல்தான் 15 நாட்கள் சந்திரன் தேய்ந்து அமாவாசையாகவும், 15 நாட்கள் வளர்ந்து பௌர்ணமியும் உண்டாகின்றன. இந்தக்கருணை யால் சிவபெருமான் 27 பெண்களுக்கு விதவைக்கோலம் ஏற் படாது தடுத்து அருளினர். இதனுல் அக்கருணையை "பிறை சூடி" என விளித்துப்பாடினர் வன்றெண்டர். இருபத்தேழு பெண்களுக்கு நன்மை செய்த பெரியவர் என்பதற்காக "பெருமானே" எனவும், அவ்வாறு அருளுடையவன் என் பதற்காக 'அருளாளா!" எனவும் அழைத்தார். "இறைவ னுக்கு எல்லாப் பெயர்களுமே பொருந்தும்! புறச்சமயப் பெயர்கள் கூடப் பொருந்தும். என் பெயரும் உன் பெயரும் எல்லாப் பெயர்களும் அவருடையதுதானே! பித்தன் எனப் பெயர் பெற்றிருக்க எல்லாப் பெயர்களும் பொருந்துமே" என்கின்ருர் ஜோதி ராமலிங்க சுவாமிகள்.

சிற்சபையில் நடிக்கின்ற நாயகனுர் தமக்குச்
சேர்ந்த புறச்சமயப்பேர் பொருந்துவதோ என்ருய்
பிறசமயத்தார் பெயரும் அவர் பெயரே கண்டாய்
பித்தரென்றே பெயர்படைத்தார்க்கு எப்பெயர் ஒவ்வாதோ?
அச்சமயத் தேவர்மட்டோ? நின் பெயர் என் பெயரும்
அவர் பெயரே! எவ்வுயிரின் பெயரும் அவர்பெயரே!
சிற்சபையில் என்கணவர் செய்யுமொரு ஞானத்
திருக்கூத்துக் கண்டளவே தெளியுமிது தோழி!

தன்னை வன்றெண்டர் 'பித்தா' என அழைத்ததனுலேயே "பித்தா" எனப் பாடுமாறு அடியெடுத்துக் கொடுத்தார் இறைவர். "பித்தா பிறைசூடி" என்ற சொல் ஞானசம்பந்தர் வாக்கில்,

விண்ணேர் பெருமானே! விகிர்தா! விடையூர்தி!
பெண்ஆண் அலியாகும் பித்தா! பிறைசூடி!

எண்ணூர் எருக்கத் தம்புலியூர் உறைகின்ற
அண்ணா! எனவல்லார்க்கு அடையா வினைதானே.

என்று முதல் திருமுறையில் வந்துள்ளது. அதனை நினைப் பூட்டவே இறைவன் பித்தா என அடியெடுத்துக் கொடுத்தனர். சுந்தரரை முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் சொல்லும் பொன்னே போல் போற்றும் இலக்கணத்தின்படி நடக்க வைத்தார் இறைவர். ஞானசம்பந்தரின் வாக்கிய "பித்தா" என்ற சொல்லை இறைவன் திருடி சுந்தரர்க்கு கொடுப்பார் என்பதை யறிந்துதான் "கவர்கள்வன்" என ஞானசம்பந்தர் கூறினார் போலும்! இறைவனது அளவிலாக் கருணையை பித்தா என்று குறிப்பிட்டவர் அதற்கு பிரத்யட்ச பிரமாண மாக சந்திரனைக் காத்தருளிய புராண நிகழ்ச்சியைக் குறிப்பிட்டார். தளர்ந்தவரைத் தாங்குவது இறைவனது கடமையன்றோ! அந்நிலையில் தன்னையும் தாங்க வேணுமெனக் கூறி "பித்தா" பிறைசூடிய பெருமானே! அருளாளனே! உன்னை நான் மறக்க முடியாது என் மனத்தே வைத்து அருளினாய். திருவெண்ணெய்நல்லூர் அருட்டுறைக் கோயிலில் உள்ள தலைவ! முன்பே உனக்கு அடிமையான நான் இப்போது உனக்கு அடிமையில்லை என எதிர்வழக்குப் பேசலாமா!

பித்தா பிறைசூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய்ப் பெண்ணைத் தென்பால் வெண்ணை நல்லூரருட்டுறையுள்
அத்தா உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே.

இவ்வாறு பாடிய சுந்தரமூர்த்தி நாயனாரை இறைவன் "இன்னும் பாடு" என்றார். இல்லாவிட்டால் "பித்தா" என்ற பாட்டுடன் நாயனார் முடித்திருப்பார். இறைவன் அருளிய தால் நமக்கு ஏழாவது திருமுறை கிடைத்தது. நாயனார் மேலும் மேலும் பாடலானார்.

திருமணம் நின்றபின், மணப்பெண் சுந்தரமூர்த்தி நாயனாரையே தியானித்து எவருக்கும் கிடைக்காத சிவபதி அடைந்தாள்.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவடிகளே சரணம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க்கைத் துணை

'சொஞ்சொற் கவிமணி'
திரு: புலவர்: மா. வேங்கடேசன் அவர்கள்,
பச்சையப்பன் உயர்நிலைப்பள்ளி [தமிழாசிரியர்]
காஞ்சிபுரம்–1

–o–

(சென்ற இதழ் பக்கம் 82-ன் தொடர்ச்சி)

மேலும் அவர், தாம் போற்றும் வீரசுவாஜியின் வாயிலாக அந்நியர் நம்மவரிடை உண்டாக்கியுள்ள தீமைகளை எடுத்துரைக்கும்போது,

''பொருளினைச் சிதைத்தனர்!
மருளினை விதைத்தனர்!
திண்மையை அழித்துப்
பெண்மையிங்களித்தனர்!

என்று கூறியுள்ளார். மற்றோரிடத்தில் பெண்ணுள்ளம் ஆணுள்ளத்தைப் போன்று உறுதியுடையதன்று என்பதைக் குறிப்பிட்டுள்ளார். இக்கருத்தைத் தான் வழிபடும் கண்ண பிரான் வாயிலாக வெளியிட்டிருக்கிறார்.

கௌரவர் கூட்டத்தை அழிக்கப் போர்க்களம் சென்ற அருச்சுனன் அங்கே தன் உற்றார் உறவினர்களையெல்லாம் கண்டு அவர்களைக் கொல்லத் தயங்கித் தனது நிலையைக் கண்ணபிரானிடம் கூறுகிறான். அதுகேட்ட கண்ணபெருமான் அவனைக்கண்டித்து அறிவுரை கூறுபவர்,

''உண்மையை அறியாய்! உறவையே கருதிப்
பெண்மை கொண்டதோ? பிதற்றி நிற்கின்றாய்!''

என்று கேட்கின்றார், இவற்றால் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே பாரதியார் கண்டுள்ள வேற்றுமை நன்கு புலனாகின்றதன்றோ?

இவ்வாறு உடலாலும் உள்ளத்தாலும் பெண்கள் ஆண்களோடு சமமாக விளங்க முடியாத இயல்பைப் பாரதியார்

பல இடங்களில் விளக்கமாகக் கூறியுள்ளாராகையால் ஆணும் பெண்ணும் உயர்வு தாழ்வு கருதாது வாழவேண்டும் என்ற சமத்துவத்தைத்தான் அவர் வற்புறுத்தியுள்ளாரே ஒழிய, இயற்கையாகவே இருபாலாரிடையமைந்துள்ள உடல் உள்ள வேறுபாட்டை மறந்து சமத்துவம் கொண்டாட வேண்டு மென்று அவர் எங்கும் கூறவில்லை என்பதை நன்கு தெளிய வேண்டும்.

“மேற்கண்டவாறு பாரதியார் இருபால் வேறுபாடு கொள்பவர்தாம் என்றால், பெண்கள் மென்மையானவராத லின் இல்லத்தே இருந்து கணவனுக்குத் துணைபுரிய வேண்டும் என்ற பண்டைய கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்க வேண் டும். அவர் அதனை ஏற்கவில்லையே! பெண்களும் ஆண்களைப் போன்று வெளியுலகிலும் சென்று பணியாற்ற முடியும் என் றன்றோ கூறியுள்ளார்! இது எவ்வாறு பொருந்தும்?” என்று தடை எழுப்பக்கூடும்.

‘ஆண்மையும் பெண்மையும், வன்மையும் மென்மையு மாகத்தான் விளங்க முடியும்’ என்பது பாரதியாரின் உறுதி யான கருத்து. ஆகவே ‘பெண்களும் வெளியுலகில் சென்று பணியாற்ற முடியும்’ என்று அவர் கூறியிருப்பதாலேயே ‘இவர்களும் ஆண்களைப் போன்று திண்மை வாய்ந்தவர் தாம்’ என்று பாரதியார் கருதினர் எனக் கொள்ள முடியாது. இதனை நிறுவ மேலும் சிறிது விளக்க வேண்டும்.

வாழ்வு, அகவாழ்வு புறவாழ்வு என இருவகைப்படும். பெண்களுட் சிலர் அகவாழ்வாகிய குடும்ப வாழ்வை ஏற்காது புறவாழ்வாகிய நாட்டுத் தொண்டில் ஈடுபடக்கூடும். இவர் கள் வீரப்பெண்கள்! பண்டைத் தமிழகத்திலும் இத்தகைய வீரப் பெண்கள் வாழ்ந்ததைக் காண்கிறோம்.

“உலகவாழ்க்கையின் நுட்பங்கள் தேரவுங்
ஓதுபற்பல நூல்வகை கற்கவுங்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவும் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலகவாணுத லார்தங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்!
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்!”

என்று அத்தகைய வீரப்பெண்களையே நாட்டுத்தொண்டாற்ற வேண்டுமென்று அழைக்கிருர் பாரதியார்.

மேலே கூறப்பெற்றவர் வீரப்பெண்களேயாயினும் அவர்களும் ஆணியல்பை விஞ்ச முடியாத பெண்ணியல்பு உடையவர்தாம் என்பதை அவர்தம் செயலாற்றல்களால் உணரலாம். அகவாழ்வில் ஈடுபட்டுள்ள பெண்களை நோக்க இவர்கள் வன்மையுடையவர்களாகக் காணப்படலாம்! ஆனுல் புறவாழ்வில் தொழில் புரியும் ஆண்களுக்கிணையாகப் பணி புரிய இவர்தம் உடல் உள்ளங்கள் இடம்தரா என்பது வெளிப் படையான உண்மை!

அஞ்சா நெஞ்சமுடைய வீரமிக்க பெண்களை உலகோர் 'காளி' அன்று அழைப்பர். சக்தியின் ஓர் அம்சமாக விளங்கு பவள் காளிதேவி! அவள் அளவிடமுடியாத பேராற்றல் வாய்ந்தவள். 'மலைகளையே கழங்குக் காய்களாகக் கொண்டு ஆடுவாள்' என்பதிலிருந்து அவளது ஆற்றலை அறிந்து கொள் ளலாம். இத்தகைய பெருவலிமையுடையவளாயினும் நடன மாடுவதற்குச் சிவபெருமானேடு போட்டியிட்டுத் தோற் ருள்! அவ்வாறு அவள் தோல்வியடைவதற்கு அவளதுபெண் ணியல்புதான் காரணமாக இருந்தது என்பதைச் சிவப்பிர காசர்,

''மண்ணிடை யொருதாள் ஊன்றி
மற்றொரு கமலப் பொற்ருள்
விண்ணிடை எடுத்து மேலோன்
நடிப்பது வீரி கண்டு
துண்ணென நாணுட்கொண்டு
சுடுங் கனற்பட்ட மென்பூ
வண்ணம தெனப் புலர்ந்து
வதனம்வன் றலைகுனித்தாள்.''

என்று திருக்கூவப் புராணத்துள் இனிமையாக எடுத்துக் காட்டியுள்ளார்.

வீரத்தின் விளைநிலமான காளியினிடத்திலும் ஆண் மைக்கு இணையாக மாட்டாத பெண்மையைத்தான் காண முடிகிறது என்ருல் இன்று புறவாழ்வில் ஈடுபடும் பெண்கள்

மட்டும் எப்படி உடல் உள்ளங்களால் ஆண்களுக்கு நிகராக விளங்க முடியும்? ஆகவே அகவாழ்விலாகட்டும் புறவாழ்விலாகட்டும் பெண்மை ஆண்மையை நோக்கமென்மைத் தன்மையே என்னும் உண்மையை உணர்ந்து ஒழுகுதலே அறிவுடைமையாகும்!

இவ்வாறு ஆண்களும் பெண்களும் முறையே வன்மையும் மென்மையும் உடையவர்களாக இருப்பதால்தான் இல்வாழ்க்கையில் பெண்கள் கணவனைச் சார்ந்து அவனுக்குத் துணைபுரிந்து வாழவேண்டும் என்று முன்னோர் வகுத்துள்ளனர். இவ்வாறு சார்ந்து வாழவிரும்பாதார் பாதுகாப்பற்றவராவதோடு வாழ்க்கைத் துணையாகவும் விளங்க முடியாது.

எத்தகைய பெண் வாழ்க்கைத் துணையாகத் தக்கவள் என்பதை,

> மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை'

என்று வள்ளுவர் அதிகாரத் தொடக்கத்திலேயே சுருக்கமாகக் கூறிவிட்டார். வாழ்க்கைத் துணையாகும் மகளிர்க்கு பல நற்குணங்கள் வேண்டியிருப்பினும் இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகளும் தன்னைக் கொண்டவனது வருவாய்க்கு ஏற்ப வாழ்க்கை நடத்தும் திறமும் மிகவும் முக்கியமாதலின் இவ்விரண்டையும் முதலிலேயே கூறியுள்ளார். ஆகவே மேற்கண்ட இருதிறங்களையும் முக்கியமாக உடையவளாய்த் தன்னைத் துணைவியாக ஏற்றுக்கொண்ட கணவனையே தானும் பற்றுக் கோடாகக் கொண்டுவாழும் பண்புடையவளே சிறந்த வாழ்க்கைத் துணைவியாவாள். எனவே மகளிர் இத்தகைய சிறந்த வாழ்க்கைத் துணைவியராகித் தம் கணவரோடு கருத்தொருமித்து இல்லறமாகிய நல்லறத்தை முறையாக ஆற்றி இன்புறுவார்களாக!

[சிவ சிவ

இந்து சிந்தனையாளர் கவனத்துக்கு

கடந்த சில காலமாக பகுத்தறிவாளர்கள் என்றும் நாத்திகர்கள் என்றும் தம்மைக் கூறிக்கொள்வோர், இந்து சமுதாயத்தின் ஒரு சாராரை திசை திருப்ப முயன்று வருகின்றார்கள்.

புனிதமான இந்து நூல்கள், இலக்கியங்கள், சமயம், பண்பாடு, சடங்குகள், வாழ்க்கைமுறை, தர்மம் ஆகியவற்றின் ஆழத்தையும், உட்பொருளையும் உணர இயலாதவர் உள் அவதூறு பரப்பி வருகிறார்கள்.

இந்துக் கருத்துக்களை சரியான பார்வையில் திறமையுடனும், தர்க்கரீதியாகவும் விளக்கக்கூடிய சிந்தனையாளர்கள், அறிஞர்கள் ஆகியோர் தமது விலாசங்களையும், தாம் அறிந்தவர்களின் முகவரியையும் எங்களுக்குக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தால் அவர்களுடன் நேரடித்தொடர்பு கொண்டு, ஆவனசெய்ய வசதியாக இருக்கும்.

[ஸ்ரீ. எஸ். சம்பத்குமார், செயலாளர், விசுவ இந்து பரிஷத்; 15. விச்சூர், முத்தையா முதலித் தெரு: வேப்பேரி சென்னை–7. [

———

பிழை திருத்தம்

சென்ற இதழில் (ஆண்டு மலர்–25 இதழ் 1)

பக்கம் 62ல் வெளிவந்த "கலைமகள் பஞ்சரத்தினத்தில் உள்ள கீழ்க்கண்ட அச்சுப் பிழைகளைத் திருத்திக்கொள்க,

பாடல் 4 முதற்சீர் "சொஞ்சொற்" என்பதை "செஞ்சொற்" எனவும்

பாடல் 4 இரண்டாமடி கடைசிச்சீர் அருள்வேள்வியால் என்பதை "அருவேள்வியால்" எனவும்

பாடல் 5 முதலடி "செந்தமிழ்" என்பதை "செழுந்தமிழ் எனவும் திருத்தி வாசிக்கவும்.

பக்கம் 4 திருஞானசம்பந்தர் பஞ்சரத்தினத்தில்

பாடல் 4 வரி 2ல் வெற்புநோய் என்பதை வெப்புநோய் எனத் திருத்துக

சிவ சிவ]

THE 73rd. FEEDING CHARITY
AT VARANASI – Rs. 14,500/-

This Endowment is founded by HIS HOLINESS SILASRI KASIVASI MUTHUKUMARASWAMI TAMBIRAN SWAMIGAL AVERGAL, the 21st Head of Sri Kasi Mutt, Tirupanandal and Mahant of Kumaraswami Mutt, Kedar Ghat, Varanasi for conducting daily feeding of Brahmins, Maheswara Pooja and Feeding of the Poor in Kumaraswami Mutt, Kedar Ghat, Varanasi in addition to the daily feeding conducted according to other endowments.

2. A sum of Rs. 11,210-30 has been received towards Tasdic allowance and Additional Compensation under Section 38(1) and 38(2) of the Act 26 of 1948 for fasli 1383 in respect of Talirmarungur village in Tiruvadanai Taluk in the Proceedings of the Revenue Divisional Officer, Devakottai in No. A. 5. 15724/73 dated 16—10—1973. A further sum of Rs. 881-25 has also been received towards Tasdic Allowance under section 32(1) of Act 26/63 for Fasli 1383 in respect of Anayarkottai village, Tiruvadanai Taluk Further another sum of Rs. 2258-44 being the Tasdic Allowance and Additional Compensation under section 32(i) and 32(ii) of Act 26/63 for faslis 1382 and 1383 in respect of Mangudi Village in Tirupathur Taluk, Ramanathapuram District has also been received. Rounding these amounts to Rs. 14,500/- this endowment is founded as Feeding Charity at Varanasi. This is the 33rd Endowment created by the Donor. This Endowment is called "The 73rd FEEDING CHARITY AT VARANASI".

3. The Capital of the endowment is Rs. 14,500/- (Rupees Fourteen thousand and five hundred only) and is invested in Long Term Fixed Deposits in The State Bank of India, Kumbakonam for 61 months fetching interest at 7-3/4% per annum.

S No.	F.D N.o	Date	Amount
1·	C. 560491	20-11-1973	Rs. 5,000/-
2.	C. 560492	,,	Rs. 5,000/-
3.	C. 560493	,,	Rs. 4,500/-
		Total	Rs. 14,5000/-

The administration of the fund shall vest in us and our Successors-in-interest as Head of Sri Kasi Mutt, Tirupanandal.

4. The interest accrued after deducting the incidental charges for administering the fund and supervision of feeding etc. shall be utilised to conduct feeding of Brahmins, Maheswara Pooja and Feeding of Poor in our Kumaraswami Mutt, Kedar Ghat, Varanasi along with the other daily feeding charities conducted by us according to other endowments administered by us.

5. (a) The feeding shall be conducted according to the Thitta Japtha (Budget) prepared by us and our Successors-in-interest.

(b) The balance if any left after meeting the above said expenditure shall be utilised for the upkeep of the Choultry in our Kumaraswami Mutt, Kedar Ghat, Varanasi.

6. The endowment shall not be diverted to any other purpose than those mentioned above. The endowment capital shall stand in our name and our Successors-in-interest as Head of Sri Kasi Mutt, Tirupanandal. The capital shall be re-invested in Fixed Deposits or Government Securities fetching high rate of interest as and when necessary.

Tirupanandal
20—11—1973 } (Sd·) Kasivasi Muthukumaraswami Tambiran

Registered at the Doct No. 42/73 of Book-4, Volume 59 Pages149to 151. as the Sub-Registrar's Office Tiruvidaimarudur on 22—11—1973

மதுரையில் மகா சிவராத்திரி தேவார விழா

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்
சுவாமிகள் அவர்களின் ஆணையின் வண்ணம் நடத்தப்பெறுவது
பிரமாதீச—ஸு மாசி மீ 8௨ 20—2—74 புதன்கிழமை

மாசி மகா சிவராத்திரி

நீல மாமிடற் றால வாயிலான், பால தாயினுர் ஞாலம் ஆள்வரே
ஆட லேற்றினன் கூடலாலவாய், பாடியே மனம் நாடி வாழ்மினே—*சம்பந்தர்*

மாகத்து அபரதிர யோதசியோ டேபதினுன்கு
ஏகவா ரத்தின்இசை யின்.
அற்றைநிசி யிற்சிவன்தாள் அர்ச்சிக்க பாசவிதம்
அற்(று) அமலன் பாதம் அடைவார் –(*மாசி மகாசிவராத்திரிகல்பம்*)

திருமுறை வாணர்கள்:–

1. சுரலய இசைவள்ளல் திரு. M. கனகசபைப் பிள்ளை, ஸ்ரீ காசிமடம் சிவ சிவ ஒலிமண்டப ஓதுவார், சிதம்பரம்.
2. திரு. M. சுப்பிரமணிய முதலியார், தேவார ஆசிரியர், திருப்பனந்தாள்.
3. சங்கீதபூஷணம் திரு. P. சாமிநாத முதலியார், சென்னை,
4. தமிழ்மறை இன்னிசைப் பண்மணிகள் திரு. விசுவலிங்கம், சபாபதி சகோதரர்கள், திருவாவடுதுறை.
5. இசைநம்பி திரு. S. S. கல்யாணசுந்தர தேசிகர், ஸ்ரீ காசிமடம் கட்டளை ஓதுவார், கும்பகோணம்.
6. தேவாரமணி திரு. S. சைலப்ப ஓதுவார், திருமுறைப்பணி, மதுரை.
7. திரு. T. M. கிருஷ்ணன், பிடில், கும்பகோணம்.
8. திரு. வி. வேல்சாமி முதலியார், வேய்ங்குழல், மதுரை.
9. திரு. தியாகராசன், மிருதங்கம், மதுரை.

48, வடக்காவணி மூலவீதி
மதுரை

சிவசர்ம பாஸ்கர
ம. க சுந்தரேச பட்டர்,
ஆசிருதம்
ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்

குறிப்பு:– மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மன் சந்நிதியில் இரவு 8 மணிக்குத் தொடங்கிச் சிவமே நிலவும் ஆடி நான்கு வீதிகளில் இரவு முழுவதும் திருமுறைவாணர்கள் திருமுறையோதிக் காலை 6 மணிக்கு ஸ்ரீ மீனாட்சியம்மன் சந்நிதியில் பூர்த்தி செய்வார்கள்,

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

உ

சிவ சிவ

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர்
ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் ஆணையின் வண்ணம் நடைபெறும்

மகா சிவராத்திரிக் கட்டளைகள்

தலம்	செலவுத் தொகை	தலம்	செலவுத் தொகை
1. திருக்காளத்தி	ரூ 90	21. திருவாப்பாடி	ரூ 28
2. மைலாப்பூர்	ரூ 65	22. திருப்பனந்தாள்	ரூ 100
3. திருவான்மியூர்	ரூ 60	23. ,, (படிக்காசு)	ரூ 65
4. திருமாகறல்	ரூ 70	24. திருலோக்கி	ரூ 28
5. திருவண்ணமலை	ரூ 140	25. கஞ்சனூர்	ரூ 60
6. திருக்கோவலூர்	ரூ 39	26. திருச்சிராப்பள்ளி	ரூ 80
7. திருவெண்ணெய்நல்லூர்	ரூ 28	,, (படிக்காசு)	ரூ 40
8. திருவதிகை	ரூ 28	27. திருச்செங்கோடு	ரூ 65
9. திருப்பாதிரிப்புலியூர்	ரூ 46	28. திருமுருகன்பூண்டி	ரூ 65
10. விருத்தாசலம்	ரூ 70	29. அவிநாசி	ரூ 65
,, (படிக்காசு)	ரூ 25	30. மதுரை	ரூ 112
11. சிதம்பரம் (படிக்காசு)	ரூ 80	31. திருக்குற்றாலம்	ரூ 90
12. சாயாவனம்	ரூ 41	R. C.	
13. ஸ்ரீ வாஞ்சியம்	ரூ 55	32. திருச்சேய்ஞலூர்	ரூ 25
14. திருவைகாவூர்	ரூ 55	33. திருப்பனந்தாள்	ரூ 25
15. திருக்கண்டியூர்	ரூ 45	34. திருலோக்கி	ரூ 25
16. திருப்பூந்துருத்தி	ரூ 45	35. திருவாப்பாடி	
17. திருமழபாடி	ரூ 45	(அமாவாசைக்கட்டளை &	
18. திருப்பழனம்	ரூ 45	சிவராத்திரி	ரூ 160
19. திருவலஞ்சுழி	ரூ 70	36. தருமபுர ஆதீன	
,, (படிக்காசு)	ரூ 25	ஸ்ரீ ஞானபுரீசுவரர்	ரூ 75
20. திருக்கொட்டையூர்	ரூ 120	ஸ்ரீ தருமபுரீசுவரர்	ரூ 75

ஸ்ரீ காசிமடம்
திருப்பனந்தாள்
20—2—1974

ஆணைப்படி
S. முருகேசம் பிள்ளை
காறுபாறு

சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ சிவ

Thevara Goshti-Mahasivaratri Festival

KALAHASTI

Conducted according to the orders of His Holiness
Sila Sri Kasivasi Muthukumaraswami Tambiran
Swamigal Avergal,
Head of Sri Kasi Mutt, Tirupanandal (Thanjavur Dt.)
From 17-2-74 to 22-2-74

The Siva Shrine at Kalahasti is one of the shrines sanctified by the Hymns improvised by the three Great Saiva Saints–Tirugnanasambandar, Tirunavukkarasar and Sundarar. A spider, a cobra and an elephant attained salvation by worshipping the Lord and hence the Kshetra got the name Sri Kalahasti. It is one of the Pancha Bhaoota Kshetras-Vayulinga where Kannappa Nayanr attained beatitude in six days. In such a famous Kshetra a Thevara Goshti will be conducted for six days from 17—2—74 to 22—2—74 during the Mahasivaratri Festival of Sri Kalahastiswaraswami Devasthanam at Kalahasti and the names of the Thevara Hymnists are given below.

1 Thevara Isaimani Thiru. P. Ramachandra Othuvar, Tirumagaral.

2 Thevaramani Thiru. A. Sattayappan, Chidambaram.

3 Thevaramani Thiru. Chockalinga Othuvar, Kalahasti.

4 Sangeetha Bhooshanam Thiru. S. A. Gopalan, Flute, Tirupanandal.

5 Thiru G. Venkataraman, Mirudangam, Tirupanandal.

MAY SIVA BLESS ALL

K. K. SATYANARAYANA, B A LL B.
Asst. Commr. & Executive officer
Sri Kalahastiswaraswami Devasthanam
KALAHASTI (Andhra Pradesh)

K. Subramanya Iyer B.A
Thiagaraja vilasam
53, Pillaiyar Koil Street
Triplicane P.o. MADRAS-5

குரவிரி சோலை சூழ்ந்த
 குழகன் குடமூக்கிடமா
இரவிரி திங்கள் சூடி
 இருந் தானவன் எம்மிறையே.

பொழிப்பு: பாம்பைப் போலப் பூக்கள் விரிந்த காந்தட் செடியின் நீண்ட வரிசைகள் அழகு செய்கின்ற காவிரி யாற்றின் பக்கத்திலே, மரா மரமும் விரிந்த பூக்களையுடைய மௌவலும் மணம் வீசும் மல்லிகையும் தேனைச் சிந்துகின்ற குரா மரங்களும் ஆக விரிவுற்ற சோலைகளால் சூழப்பட்ட திருக்குடமூக்கு என்னும் தலத்தை இருப்பிடமாகக் கொண்டு இரவிலே நிலா விரிக்கின்ற திங்களைச் சூடிக் குழகனாகிய சிவ பெருமான் எழுந்தருளினான்: அவனே எங்கட்குக் கடவுள்.

அர - அரா – பாம்பு; கோடல் - காந்தள்; நீடல் - நீண்ட வரிசை; மர–மராமரம்; மௌவல்-காட்டு மல்லிகை; குர-குரா மரம்; குழகன் – இளைஞன்; குடமூக்கு- கும்பகோணத்தில் உள்ளகும் பேசுவரர் கோயில். காவிரியாற்றயலே குடமூக்கு இடமாகக் குழகன் இருந்தான்: அவனே எம்இறை என முடிக்க. மறையோர் எதிர் கொள்ளுமாறு ஞானசம்பந்தர் திருக்குடமூக்கினை நெருங்கி வரும் போது இப்பதிகம் அருளிச் செய்தார் இப்பதிகத்தைப் பாடவல்லவர் மேலுலகம் எய்துவார்; அவர்க்கு வீடுபேறும் எளிதாகும்.

(தொடரும்)

உ

சிவ சிவ

சிவாய நமவெனச் சித்தம் ஒருக்கி
அவாயம் அறவே அடிமைய தாக்கிச்
சிவாய சிவசிவ வென்றென்றே சிந்தை
அவாயங் கெடநிற்க ஆனந்த மாமே.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் 'திருமுறை வெளியீடுகள்'

			ரூ.	பை.
1	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர்குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3	50
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும்	...	0	40
3	,, சிதம்பர மும்மணிக்கோவை ,,	...	0	20
4	,, மதுரைக்கலம்பகம் ,,	...	0	40
5	,, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,,	...	0	60
6	திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா—மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்—மதுரைக்கலம்பகம்—நீதிநெறி விளக்கம்—மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம்	...	2	70
7	திருவாரூர் நான்மணிமாலை—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்	...	1	25
8	திருவாரூர் நான்மணிமாலை உரையுடன்	...	0	50
9	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1	00
10	பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை	...	1	00
11	நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும்	...	0	50
12	,, மூலம்	...	0	10
13	நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்—மூலம்	...	0	15
14	கந்தர்கலிவெணபா மூலம் மட்டும்	...	0	10
15	கந்தர்கலிவெண்பா (புதிய பதிப்பு)	...	0	05
16	அபிராமியந்தாதி மூலம்	...	0	15
17	திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு)	...	4	25
18	திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு)	...	2	75
19	சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு)	...	1	75
20	திருவாசகம் (மூலம்)	...	0	75
21	திருக்கோவையார் (பேராசிரியருரையும்பழையவுரையும்)	...	3	50
22	9—ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம்	...	0	56
23	,, ,, தெளிவுரை	...	1	50
24	திருமந்திரம் (மூலம்) புதிய பதிப்பு	...	2	50
25	பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு)	—	2	50
26	பேராயிரப் பனுவல்கள்	...	0	10
27	திருத்தொண்டர் புராணசாரம்	...	0	40
28	அம்மையார் அற்புதத் திருவந்தாதி	...	0	25
29	திருக்கைலாய ஞானவுலா-உரையுடன்	...	0	50
30	திருக்கயிலைத் திருமுறை	...	0	37
31	பழமொழித் திருமுறை	...	0	25
32	அப்பர்விழா வெளியீடு	...	0	25
33	Hymns and Proverbs	...	0	35
34	திருவாரூர்-திருப்பனுவல்கள்	...	0	[illegible]

Registered With the Registrar of Newspapers for India
Under No. R. No 1485/57.

Regd No. M. 5574 குமாரகுருபரன

35	குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத்திரட்டும் ...	0 30
36	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) ...	1 75
37	திருவாசகம் தேனும் கனியும் ...	0 15
38	தேவாரம் பாடும்பயன் ...	0 15
39	காசிக்கலம்பகம் உரை நடை ...	0 15
40	தாழைத் திருமுறை ..	0 15
41	ஐந்து நீதி நூல்கள் ..	0 10
42	நவக்கிரகமாண்பு ..	0 25
43	ஸ்ரீ சைலம் ...	0 10
44	திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள் ...	0 37
45	திருவெம்பாவை - திருப்பள்ளியெழுச்சி ...	0 10
46	செந்திலாண்டவன் மகிமை ...	0 15
47	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் (4-ம் பதிப்பு) ...	2 00
48	திருமுருகாற்றுப்படை ..	0 15
49	தேவார வைப்புத்தல விளக்கம் ...	0 15
50	திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) ...	2 00
51	திருக்குறள் மூலம் ...	0 25
52	திருக்குறள்-அறத்துப்பால்-சிற்றுரை	0 20
53	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம் ..	0 15
54	முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை)	0 60
55	திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் ..	1 50
56	திருக்குறள்-பொருட்பால் ,,	2 50
57	திருக்குறள்-காமத்துப்பால் ,, ..	1 00
	ஷை 53, 54, 55 திருக்குறள் 3 புத்தகமும் ...	4 00
58	கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் ...	1 25
59	திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் ..	1 00
60	சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் ...	3 00
61	அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) ...	0 50
62	மங்கலம் ..	0 20
63	திரு ஆனைத் திருமுறையும உருத்திராக்க விதானமும் ..	0 20
64	கோதனத் திருமுறை ..	0 10
65	தோடுடைய செவியன் கோவண ஆடையன ...	0 15
66	பண்டார மும்மணிக்கோவை உரை நடை ...	0 15
67	மகேசுவரபூசை ...	0 15
68	கந்தர் அநுபூதி-சுவாமிமலை கும்பாபிஷேக நினைவு மலர் ...	0 10
69	திருவிசைப்பா தேனும் கனியும் ...	0 10

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. **ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்**
2. **"தியா[illegible]ஜ விலாசம்"** 53. பிள்ளையார் கோவில் தெரு, திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம் -74·